குங்குமச்
# சிமிழ்
1-12-2012
ரு 4.00



நீங்களா நானா
விக்கிரமன்

முழு நாவல்

# நீங்களா நானா

## விக்கிரமன்



"புவனா கையை எடு" என்று சந்திரசேகரன் கூறிப் புவனாவின் கரங்களைப் பிடித்து மெல்ல விலக்கினான்.

"நான்தான் உங்கள் கண்களைப் பொத்தினேன் என்று உங்களுக்கு எப்படித் தெரியும்? பாரதியாரின் கண்ணம்மா பாத்திரம் போல் என்னையும் நினைத்துவிட்டீர்களா?" என்று கூறிப் புவனா, சந்திரன் அருகே வந்து நெருங்கி அமர்ந்தாள்.

சந்திரசேகரன் நீண்ட நேரமாகப் புவனாவிற்காகக் காத்திருந்தான். கோயில் குளத்து மண்டபத்துத் தூணில் சாய்ந்து அந்திமாலை வெளிச்சத்தில் நிழற்படம் போல் குளத்து நீரில் கோபுரம் பிரதிபலிப்பதையே எவ்வளவு நேரம் பார்த்துக் கொண்டிருப்பான்? ஐந்தரை மணிக்கே வருகிறேன் என்று புவனா உறுதியாகச் சொல்லியிருந்தாள். அதனால்,



அலுவலகத்தில் ஒருமணி நேர அனுமதி பெற்று ஐந்து மணிக்கே சந்திரன் வந்துவிட்டான்.

"உன்னையல்லாமல் வேறு யார் என் கண்களை அவ்வளவு உரிமையுடன் பொத்த முடியும்?" என்று சந்திரன் கேட்டு, அவள் நெற்றியில் படிந்திருந்த கேசத்தை மெல்லத் தள்ளிவிடும் பாவனையில் அவளுடைய அகன்ற விழிகள், எள்பூ மூக்கு, பவழ உதடுகள், சொப்பு போன்ற முகவாய், சங்குக் கழுத்து எல்லாவற்றையும் விரல் நுனியால் மீட்டினான்.

புவனா, பாரதியின் கண்ணம்மா பாட்டை மெல்ல முணு முணுத்தாள்.

"உனக்குப் பாரதியார் பாட்டு முழுவதும் மனப்பாடமா?" எனச் சந்திரன் கேட்டான்.

"கொஞ்சம் கொஞ்சம். கண்ணன் பாடல்கள் என்றால் பிடிக்கும். இப்பொழுதுதான் அச்சாகி வந்ததாம். அப்பா ஒரு புத்தகத்தை வாங்கித் தந்தார். படித்தேன்; ஆகா..."

"எங்கே ஒரு பாட்டுப் பாடு".

"ஹூம்... ஹூம்... இப்பொழுது முடியாது."

"பிறகு எப்பொழுது?"

"நாம் ஏகாந்தமாக இருக்கும்பொழுது."

"அது என்ன தனியே ஓர் ஏகாந்தம்? இங்கு மட்டும் என்னவாம்? சுற்றிலும் நின்று நம்மை யாராவது வேடிக்கைப் பார்க்கிறார்களா?"

இருந்தாலும் முறையாகக் கல்யாணமாகி..."

"ஹூம்; அப்புறம் சொல்லு".

"சொல்ல மாட்டேன். சொல்லித் தெரிவதில்லை மன்மதக்கலை" – அவள் முகத்தை மூடிக் கொண்டாள்.

"அப்பாடி! பாரதியாரைக் கரைத்துக் குடித்திருப்பதை இப்படி எல்லாம் காட்டிக் கொள்ள வேண்டுமா?"

"ஆமாம்! பாரதி கனவு காணும் புதுமைப்பெண் போல வாழ நினைக்கிறேன். இந்தக் காலத்துக்குச் சரிப்பட்டு வருமோ? அவர்

மதுரை மீனாட்சியம்மன் கோயிலில் தெற்குப் பிரகாரத்தில் எழுந்தருளிய பிள்ளையாருக்கு பக்தர்கள் விபூதி அபிஷேகம் செய்வதால் இவர் விபூதி பிள்ளையார் என அழைக்கப்படுகிறார்.

- க.ரவீந்திரன்



என்னவோ எங்களுக்காகப் பாடிவிட்டார்."

"அதென்னவோ தெரியாது புவனா! கல்யாணமான பிறகு நீ வேலையை விட்டுவிட வேண்டும்."

"ஏன், உங்கள் அம்மா சொல்லிவிட்டார்களா? இரண்டு உறுதியாகிவிட்டது. நம் கல்யாணத்திற்கு உங்கள் தாயார் சம்மதித்து விட்டார்கள் என்பது ஒன்று; புகுந்த வீட்டிற்கு வந்த பிறகு மருமகள் வேலைக்குச் செல்லக்கூடாது என்று உங்கள் தாயார் உத்தரவிட்டிருக்கிறார் என்பது மற்றொன்று."

"சும்மா அம்மா மீது பழியைப் போடாதே. நான் அம்மா சொல்படியும் கேட்பேன்; என் இதய ஒலிப்படியும் நடப்பேன்."

"ஏன் நான் சொல்வதைக் கேட்க மாட்டீர்களா?"

"இதென்ன கேள்வி புவனா? இதய ஒலி என்று சொன்னேனே... அந்த ஒலி உன் சேர்க்கையாலும் ஒலிக்கலாமல்லவா!" என்று கூறி, அவள் கரத்தை எடுத்துத் தன் மார்பில் வைத்துக் கொண்டான்.

'உங்கம்மா கல்யாணத்திற்குச் சம்மதிக்க வேண்டாமா? மாட்டேன்னு சொல்விட்டா அப்புறம் எனக்குக் கல்யாணம் நடக்குமா?"

"சீச்சீ... என் அம்மாதான் சம்மதிச்சுட்டாளே. அதைப் பத்திப் பேசத்தான் உன்னை இங்கே ஐந்தரைக்கே வரச் சொன்னேன்."

புவனா, சந்திரசேகரனைப் பார்த்தாள். அவள் முகத்துக்கு மிக அருகே அவன் நெருங்கியிருந்தான். அவள் நகர முயன்றாள். யாராவது பார்த்து விட்டால்..!

அவள் உள்ளம் பொங்கி வழிந்து கொண்டிருந்தது. உள்ளம் பேசியது. 'புவனா! நீ ரொம்பவும் அதிர்ஷ்டக்காரிடி... உன் மனசுலே நீ ஏத்துண்டவன் சுந்தரரூபன்டி. படிப்பு, குணம், அழகு எல்லாம்

நிறைந்தவன்...' அவள் உள்ளம் கும்மாளமிட்டது. நரம்புகளில் தனிச் சிலிர்ப்பு. கழுத்திலும், நெற்றியிலும் வியர்வைத் துளிகள் முத்துக் கோத்தனபோல் நின்றன.

மாலை வெளிச்சம் குறைந்து வந்தது. இருளின் ஆட்சித் தொடங்கியது.

"திருச்சுற்று மாளிகை வழியாக நடந்துப் போவோமா?" சந்திரன் கேட்டான். புவனா தலையசைத்தாள். "முடியாது– அங்கே எல்லாம் இருட்டாக இருக்கும்."

**தி**ருமண உறுதிக்குப் பின்பு, முன்பு போல் அவன் – அவள் சந்திப்பு அவ்வளவு எளிதாக இல்லை. டைப்ரைட்டிங் கற்றுக் கொள்ளும் நிலையத்தில்தான் அவர்களுடைய சந்திப்பு. அவர்களுக்கென்று ஒதுக்கப்பட்ட நேரத்தில் கற்றுக் கொள்ள வருபவர்கள் எண்ணிக்கை மிகக் குறைவு.

அவர்கள் விழிகள் பேசிக் கொண்டன. இருவரில் துணிவுமிக்கவர் அவனா, அவளா... இப்போது முடிவு செய்ய முடியாது.

தட்டெழுத்துத் தேர்வுக்கு முன்பே அவர்கள் தேறிவிட்டார்கள். வாய் திறந்து பேசவில்லை. தட்டெழுத்தால் இவன் கேட்பான்; அவள் பதில் சொல்வாள். கேள்வி – பதில் காதலைப் பரிமாறிக் கொள்வதில்லையே. வினா – விடை தொடர்ந்திருந்தால் அப்படியே புத்தகமாக வெளியிட்டிருக்கலாம். 'லவ் லெட்டர்ஸ்' என்னும் புத்தகம் ஆங்கிலம் என்பதால் உலகமெங்கும் அதற்குச் சந்தை உண்டு.

சரி, வளர்த்துவானேன்! சந்திரசேகரன் தன் தாயிடம் அனுமதி பெற்று விட்டான். புவனா வீட்டில் முதலில் முணுமுணுப்பு. பிறகு ஒருவிதப் பயம். அவள் தந்தையும் தாயும் ஒருவாறு சம்மதித்தனர். கல்யாணம் நடைபெற்றது.

**பு**வனாவை ஒருநாள் ஒரு பொழுதுகூட சந்திரசேகரனால் பிரிய முடிவதில்லை. அவள் வேலை பார்த்து வந்த 'டைப் ரைட்டிங் இன்ஸ்டிட்யூட்டை விட்டுவிட்டாள். அவள் வேலைக்குப் போவதை – அவள் மாமியார் – சந்திரசேகரனின் தாயார் விரும்பவில்லை. குடும்பச்சுமை அவள் தோளில் நிறையவே ஏறியது. இவ்வளவு வேலைக்கிடையே சந்திரசேகரனின் காந்த விழிகள், போல்லாத சிரிப்பு அவளுக்குப் புதுத் தெம்பை அளித்தன.

"புவனா, புவனா என்று நொடிக்கு ஒருமுறை கூப்பிடுகிறீர்களே,











ஒடிசா மாநிலத்தைச் சேர்ந்த ஓவியர் மனோஜ் குமார் சாருவின் ஓவியங்கள் அடங்கிய 17 கண்காட்சிகள் இந்தியா முழுவதும் நடந்துள்ளன. அவரது படைப்புகள் சிலவற்றை இங்கே காணலாம்.

- க.ரவீந்திரன்

மற்றவர்கள் சிரிக்கிறார்கள்."

"சிரிக்கிட்டுமே! நாம் அந்தரங்கத்தில் ஆயிரம் விதமாக நடந்துக்குவோம்; மற்றவர்கள் பற்றி நமக்கென்ன? உன் பாரதி பாடலும், உன் விழிகளின் கவர்ச்சியும், உன் சிரிப்பும்... எனக்கு மோடி கிறுக்குதடி புதிய மொந்தைக் கள்ளைப்போல்!"

"சீச்சீ" அவள் முகத்தை மூடிக் கொண்டு சிரித்தாள்.

அவனும் அவளும் சிரித்தார்கள். அவள் அந்தரங்க இதயம் இப்படி ஒலித்தது. என்றும் அவனோடு பிரியாமல் இருக்க வேண்டுமென்ற ஆசை அவளுக்கு.

"பெண்மை வாழ்கவென்று கூத்திடுவோமா? பள்ளியில் நடன நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டிருக்கிறாயா? பாட்டுடன் கூத்தும் சேர்ந்தால் காதல் செடி பூத்துக் குலுங்கும்" சந்திரசேகரன், புவனாவிடம் மெல்லக் கிசுகிசுத்தான்.

அவள் சொல்வது போல்

அவள் இதயஒலியை அடக்கியே வாசிக்க நேர்ந்தது. "சீச்சீ... முடியாது, கத்துவேன்" என்று அவள் சொல்வதைக் கூட மெல்லிய குரலில்தான் சொல்ல வேண்டியிருந்தது.

"உங்கள் அம்மா ஏன் இப்படி இருக்கிறாள்? அவரை உங்கள் பாட்டி மிகவும் கண்டிப்பாக நடத்துவார்களோ? அன்று திருவிழாவின்போது வாங்க வேண்டும் என்று நினைத்தோமே... காற்றில் தலையை ஆட்டும் அந்த பொம்மைகள். அதைப் பார்க்கப் பார்க்க எனக்குச் சிரிப்பு. அந்த இரண்டு பொம்மைகளையும் வாங்கி வைக்க வேண்டும் என்று விலை பேசினேன். நீங்கள் கூடாது என்று சொல்லி விட்டீர்கள்."

'என்ன... அம்மாவுக்குப் பயமா அல்லது காசில்லையா? காசு நான் தருகிறேன்' என்று சொன்னேன்.

'உன்னிடம் நிறைய காசு இருக்கிறதா? பாக்கெட் மணி கிடைக்கிறதா? என்று குதர்க்கமாகக் கேட்டீர்கள்.

'பணம் எப்படி வந்தது என்று சொல்லட்டுமா?' என்று நான் கேட்டேன்.

"ராத்திரி சொல்லேன் என்று கண் சிமிட்டிக் கொண்டு சொல்லி விட்டீர்கள்?" மறக்காமல் அவள் சொன்னாள். சந்திரசேகரன் மெல்லச் சிரித்துக் கொண்டான். அவளுக்குள்ள துணிவு கூட நமக்கில்லையே என்று அவன் அப்போது நினைத்தான்.

"நீ பொல்லாதவள். அன்று இரவு நீ செய்ததை இப்போது சொன்னால் நீயும் வெட்கப்படுவாய்."

"ஏய்... ஏய்... 'நீ இப்படி மேலே எதுவும் துணி இல்லாமல் ஒரு நொடி



திருவண்ணாமலையில் கிரிவலம் வரும்போது குபேர லிங்கத்தை அடுத்து இடுக்குப் பிள்ளையார் சன்னதி உள்ளது. இடைகாட்டுச் சித்தர் இந்த சன்னதியில் மூன்று யந்திரங்களை பிரதிஷ்டை செய்தார். இந்த சன்னதியில் படுத்த நிலையில் ஊர்ந்து நுழைந்து வந்தால் பிறவிகள் குறையும் என்பதும் நரம்பு வியாதிகள் கர்ப்பப்பை கோளாறுகள் குறையும் என்பதும் நம்பிக்கை.

- க.ரவீந்திரன்

## எரியாத மரம்

**தீ**ப்பிடித்தாலும் எரியாத மரத்தின் பெயர் டமாரஸ்கிரப் என்பது.

## பலூன் திருவிழா

**அ**மெரிக்கா, ஆஸ்திரேலியா, இங்கிலாந்து, ஜெர்மனி போன்ற நாடுகளில் ஒவ்வொரு ஆண்டும் பலூன் திருவிழா சிறப்பாகக் கொண்டாடப்படுகிறது.

- முக்கிமலை நஞ்சன்

கூட இருக்கக்கூடாது. குளியலறையில் கூட ஒரு முழத்துணியை உடுத்திக் கொண்டுதான் குளிக்க வேண்டும்' என்று என் அம்மா சொல்வாள். நாங்கள் கிணற்றங்கரையில் குளித்தவர்கள். எங்களுக்கு இருந்ததே ஒரே ரூம். கதவைத் தாழ்ப்போட்டுக் குளிக்க இங்கே வந்த பிறகுதான் ஆரம்பித்தேன்."

"சீ... கிணற்றங்கரையில்..."

"நீங்கள் நினைப்பது போலில்லை. சிதம்பரம் குளத்தில் குளித்தவள், கொள்ளிடம் ஆற்றில் குளித்தவள். புடைவையை மாற்றும்போது அதற்கு ஒரு சாமர்த்தியம் வேண்டும். இங்கே புதிதாகக் குடித்தனம் வந்திருக்கிறார்களே நம் வயது சின்னஞ்சிறுசுகள். அந்தப் பெண், 'அதெப்படி குளித்துவிட்டு வேறு டிரஸ் செய்துகொள்ளக் கதவைத் தாழிட்டால்கூட எனக்குக் கூச்சமாக இருக்கிறது. நீ எப்படி கிணற்றங்கரையில்' என்று கேட்டாள். அவளுக்கு நிறையவே தெரிந்து கொள்ள ஆசை."

சந்திரசேகரன் "உம்... உம்... என்னென்ன பேசிக் கொள்வாய்? பேசக் கூச்சமாக இருந்தால் டைப்–ரைட்டிங் இன்ஸ்டிடியூட்டில் செய்வோமே... அதுபோல் ஒரு காகிதத்தில் எழுதிக் கொடுத்து விடு... நான் படித்துக் கிழித்துப் போட்டுவேன்" என்று அவளை அப்படியே ரசித்துக் கொண்டு பேச்சை நீட்டினான்.

"ஆமாம், ஆசையைப் பாரு. ஆம்பளைங்களுக்கே இந்தக் காமசாஸ்திரம் படிக்க ஆசை. இருங்க... இருங்க" என்று ஷர்ட்டை எடுத்துப் போட்டுக் கொண்டாள். ஒரு அது ஸ்லாக். இரண்டு பக்கங்களிலும் பை. ஷர்ட்டின் பொத்தான்களைப் போட்டுக் கொண்டு அவள், அவனருகே வந்து உட்காரும்போது அவன் கண்களை மூடிக் கொண்டான்.

"உனக்கு ஏது பாக்கெட் மணி என்று கேட்டீர்கள்? ஓ! ஜாக்கெட்டில் பாக்கெட் இல்லாததால் கேட்கிறீர்கள். அடுத்த முறை நானும் உங்களைப் போல் ஷர்ட் போட்டுக் கொண்டு புடவையைக் கட்டிக் கொள்ளப் போகிறேன். அப்போது பாக்கெட்டில் பணத்தைப் போடச் சொல்லுவேன். இப்போது நீங்கள் மாதச் செலவுக்குக் கொடுக்கும் பணத்தில் உங்கள் அம்மாவுக்குத் தெரியாமல் சேர்த்து வைத்திருந்தேன். அதைப் பாதுகாப்பது நம் தலையணைதான். அம்மா தொடாத இடம் அது ஒன்றுதான்."

"அந்தத் 'தலையாட்டி நடன பொம்மைகளை' வாங்காதது, நான் சொல்ல வந்தது என்னவென்றால்..."

"என்னவென்றால்... அம்மா கோபிப்பாள் என்பதற்காகத்தானே!"

"முட்டாள்! அந்தப் பொம்மைகளை எங்கே வைப்பது? கொலு வைப்பதும் வழக்கமில்லை. இந்த வருஷம் கொலு வைப்பதென்றால் அதற்கு இடம் வேண்டும். ஸ்டூல் படிக்கட்டுகள் வங்க வேண்டும். அதை எங்கே வைப்பது?"

அவள் அப்படியே தூங்கி விட்டாள். இவனுக்கு உடனே தூக்கம் வரல்லை. அந்த அறையிலிருந்த வெளிச்சத்தில் அவள் அப்படி இருந்தது அவனுக்கே கூச்சமாக இருந்தது. அவள் இன்னும் குழந்தையாகத்தானே இருக்கிறாள்! நாணமும் இல்லை; கணவன் என்ற அச்சமும் இல்லை. அவளுக்கு எப்படிப் புரிய வைப்பது?

போர்வையை எடுத்து அவள் மீது போர்த்தி விட்டான்.

பால்காரர் குரல் இருள் பிரியாத நேரத்தில் கேட்டவுடன், இவள்தான் எழுந்துப் போய் பால் வாங்க வேண்டும். இந்தக் கோலத்திலா? அவன் பயந்திருந்தான்.

ஆனால், அவள் சீராக புடைவையைக் கட்டிக் கொண்டு வாயைக் கொப்பளித்து விட்டுப் பாலை வாங்கி வந்து ஸ்டவ்வை ஏற்ற மண்ணெண்ணெய் தேடுவாள்.

அடுப்பு மூட்டிய காலம் மறைந்து ஸ்டவ்வுக்கு மண்ணெண்ணெய் ஊற்றி காற்றடிக்கும் காலம் என்று அடுக்களையில் முன்னேற்றம் நடந்தது. விறகுக் கடைகள் மறைந்தன. மண்ணெண்ணெய்க்காக வரிசையாக நின்று வாங்கிய காலமும் மறைந்து ஆண்டுகள் மாற்றத்தைப் பதிவு செய்தன.



வயது ஏறிக் கொண்டிருக்கிறது என்பதையும் அது வெளிப்படுத்தியது.

தென்கோடி கன்னியாகுமரியினின்று சென்னைக்கு வேலை நிமித்தம் வந்தவர்களைப்போல் சிதம்பரத்தினின்று சென்னைக்கு வந்து பத்து வருடங்கள் ஓடி மறைந்து விட்டன.

அவன் தம்பியையும் சென்னைக்கு அழைத்து வந்து வேலை வாங்கிக் கொடுத்துக் குடும்பத்தைத் தோளில் தாங்கும் பொறுப்பை ஏற்றான். அப்பா இருந்தபோது குடும்ப பாரத்தை அவர் ஒரு பங்கு ஏற்றிருந்தார். அவருக்குப் பிறகு மூத்தவனுக்குத்தானே எல்லா பொறுப்பும்!

தனி வீடு பார்க்க முடியவில்லை.

மத்தியப்பிரதேச மாநிலம் ஜபல்பூரில் நர்மதை ஆறு பெகரா காட் என்ற இடத்திலிருந்து 20 கிலோ மீட்டர் தொலைவிற்கு இருபுறமும் 100 அடி உயரத்திற்கு இயற்கையாக சலவைக்கல்லால் சுவர் போல அமைந்த பகுதியில் பாய்கிறது. இதில் படகில் செல்வது உற்சாகமான அனுபவம்.

- க.ரவீந்திரன்

சற்றுப் பெரிய இடம். வாடகைக் கூடுதல்.

புதுமைப் பெண்ணாகத் திகழ வேண்டும் என்று புவனா கனவு கண்டாள். அவள் கனவை வளர்த்திடும் எண்ணம் அவனுக்கும் உண்டு. ஆனால் எல்லாம் பழங்கதையாக மாறிவிடும் போல் இருக்கிறது.

உலக நியதிப்படி தன்னிடமிருந்து தன் மகனின் அன்பை, மருமகள் பங்கு போட்டுக் கொண்டாளே என்னும் இயற்கை குணம் அவன் தாயாருக்கு இருந்தாலும் புவனா ஒரு நாள் கூட மாமியாரிடம் வம்பு செய்ததில்லை.

இரண்டாம் உலகப் போர் முடிவடைந்த சமயம்!

## 2

எப்பவும் சந்தோஷமாக, பிரியமாக, ஒற்றுமையாக... அவர்கள் வாழ்க்கை அப்படியே நடந்தது. விட்டுக் கொடுக்கும் மனப்பான்மை இருந்ததால் மற்றவர்கள் எதிர்த்தாலும் அவர்கள் அன்புப் பிணைப்பைத் துண்டாட முடியவில்லை. அம்மா எதிர்பார்த்தபடி கணவன் – மனைவியரிடையே பூசல் ஏற்படவில்லை. கல்யாணமாகி ஐந்து வருடங்கள் வரையில் வளைகாப்பு, சீமந்தம் நடக்க வழி ஏற்படவில்லை. டாக்டரிடம் சென்று, பரிசோதனை செய்யுமாறு மற்றவர்கள் சொல்வதையும் சந்துருவின் மாமனார் உபதேசத்தையும் மறுக்கவில்லை.


ஆனால், புவனா எதிர்பார்த்த இலட்சிய மாளிகையின் சிறு படிக்கட்டுக்கூட கட்டப்படவில்லை. கல்யாணமாகி முதல் இரண்டு வருடங்களில் புவனாவின் இளம் வயதுக் கனவு பலிக்கவில்லை. வீட்டுப் பொறுப்பு அதிகமாயிற்று அவளுக்கு.

மைத்துனருக்குக் கல்யாணம் நடைபெற்ற பிறகு புவனாவுக்கு அவள் எதிர்பார்த்ததுபோல் அவரோ, அவளோ மலடு இல்லை.

அதிகாரத்திற்குக் குறைவில்லை. பணப்பற்றாக்குறை ஒன்றுதான். ஆனால் “ஏகாந்தம், ஏகாந்தம் என்று சொல்லுவியே... ‘தனிமை மிக உண்டு அதிலே சாரமிருக்குதம்மா’ என்று பாடுவியே புவனா! அந்த ஏகாந்தம் இப்போ எங்கே போச்சு?” ஒரு நாள் மிக அபூர்வமாகக் கிடைத்த தனிமையில் சந்திரன் கேட்டான்.

“ஹூம்... பாரதி பாடல்கள் எல்லாம் மறந்து போய்விட்டது

## கண் திருஷ்டி கணபதி



முழு முதற் கடவுளான கணபதியை தொழுத பிறகு நமது செயல்களை தொடங்குவது வழக்கம். கணபதி அருளால் சிறப்பான வாழ்க்கை அமைந்ததும் அந்த கணபதியையே திருஷ்டி பரிகாரமாக வணங்கும் பழக்கமும் நிலவுகிறது. திருஷ்டி பரிகாரமாக கண் திருஷ்டி கணபதி என அழைக்கப்படும் கணபதி படங்கள் கடைகளிலும் வீடுகளிலும் இடம் பெறுகின்றன. கண் திருஷ்டி கணபதி குறித்த செய்திகள் தஞ்சை சரஸ்வதி மஹாலில் உள்ள ஓலைச் சுவடிகளில் உள்ளன. கடைகளில் விற்பனை செய்யும் சில கண் திருஷ்டி கணபதி படங்களில் அகஸ்தியர் அருளியது என்ற வாசகங்கள் காணப்படும். அகஸ்தியர் மதுரை சக்திபுரத்தில் மாலி, வனமாலி, மஹாநாதன், பிரபஞ்சன், ஞானசித்தன் என்ற ஐந்து சித்தர்களுக்கு உபதேசித்தார். இவர்களில் மஹாநாதன் வழிபட்ட திருக்கண் நோக்கி விநாயகர்தான் கண் திருஷ்டி கணபதி என்ற பெயரால் அழைக்கப்படுகிறார்.

**- க.ரவீந்திரன்**

சந்துரு". 'சந்துரு' என்னும் பெயர் சொல்லி அழைத்தே பல ஆண்டுகள் ஆகிவிட்டன. கணவன் பெயரைச் சொன்னால் ஆயுள் குறைவு என்று பயமுறுத்திய காலத்திலேயே புவனா யாரும் அறியாவண்ணம் 'சந்துரு' என்பாள். அதில் தனி இன்பம்தான்.

ஏழெட்டு ஆண்டுகளுக்குப் பிறகு சந்திரசேகரனுக்குப் புது வேலை கிடைத்தது. நிறைய சம்பளம். ஆனால் மாதத்தில் இருபது நாள்கள் ஊர், ஊராகப் போகும் வேலை.

"இந்த வயதில் ஊர் ஊராகச் சுற்றும் வேலை. எப்படி உங்களால் முடிகிறது?" பெட்டியைத் தூக்கிக் கொண்டு ஒவ்வொரு விநியோகஸ்தராகப் பார்த்துப் பேசி விற்பனையைப் பெருக்கும் வேலை. கடுமையான உழைப்புக்குத்தான் சம்பளம். புவனாவுடன் சேர்ந்திருந்து பேசுவதற்கே சந்தர்ப்பம் குறைந்துவிட்டது. புவனாவுக்கு மைத்துனரின்



ருஷ்ய நகை நிறுவனமான Faberge தன்னுடைய நகைகளை கடைகளில் விற்பதில்லை. ஜெனீவாவில் உள்ள ஒரு இடத்தில் சேகரித்து வைத்துள்ளது. இவைகளை இணையதளம் மூலம் வாங்கலாம். இந்த நிறுவனத்தின் ஆபரணம் ஒன்றை படத்தில் காணலாம்.

- க.ரவீந்திரன்

---

குழந்தைகளைப் பார்த்துக் கொள்வதற்கே பொழுது சரியாக இருந்தது.

“நமக்குக் குழந்தை பிறக்கவில்லையே என்று அம்மா கவலைப்படுவது இருக்கட்டும். என் தம்பி கெட்டிக்காரன். கல்யாணமான மறு வருடமே, அவன் மனைவி பிறந்தகம் புறப்பட்டு விட்டாள். தலைப் பிரசவத்துக்குப் பிறந்த வீட்டிற்குத்தான் செல்ல வேண்டுமாம். என்ன இருந்தாலும் மதுரைக்காரி கெட்டிக்காரி” என்று சந்திரன் குறைபட்டுக் கொண்டது, புவனாவுக்கு வேதனையாக இருந்தது.

“சிதம்பரமா, மதுரையா என்று கேட்பார்கள். நம் வீட்டில் திருச்செங்கோடு” என்று புவனா சந்திரனின் வேதனைக்கு மருந்திட்ட காலம் உண்டு. மைத்துனருக்குக் குழந்தை என்றால் அவளுக்கும்

சந்திரனின் கவலையில் பங்கில்லாமல் போகுமா?

அந்தக் கவலை மறந்து, அவளும் உண்டானாள்.

ஆண் குழந்தை பிறந்தது. குழந்தையின் அதிர்ஷ்டமோ என்னவோ சந்திரனுக்கு வேலை மாற்றம். எதிர்பாராமல் அதிகச் சம்பளம். 'கொடுத்ததைக் கொடுத்தான்; செல்வத்தையும் கொடுத்தான்' என்னும் புதிய பாடல் பாட வேண்டும் போலிருந்தது.

மாதத்தில் ஒரு வாரம் வெளியே பணி நிமித்தப் பயணம் என்பதுபோக, அந்தப் பயணம் பத்து நாள்கள், பதினைந்து நாள்கள் எனக் கூடுதலாயின.

"எப்போதும் இப்படியே பிரியாமல் இருக்க வேண்டும்" என்று புவனா கிசுகிசுக்க, "இப்படியே, இப்படியேதானா?" என்று கேட்க, "சீச்சீ" என்று தள்ளிவிட்டு ஒதுங்கிய அந்த நாள்கள் நினைவுக்கு வந்தன.

புவனாவுக்கு அந்தச் சம்பவங்களை நினைக்கக்கூடப் பொழுதில்லை. அவளுடைய முதல் குழந்தையை எல்.கே.ஜி.யில் சேர்க்க வேண்டும். மைத்துனரின் இரண்டாவது குழந்தை – இங்குதான் பிரசவம் – காலையில் குளிப்பாட்ட வேண்டும். மூன்று மாதக் குழந்தையைக் குளிப்பாட்டுவது என்பது ஒரு கலை. மைத்துனர் மனைவிக்கு ஒன்றுமே தெரியவில்லை. தெரிந்து கொள்ளவும் அவள் விரும்பவில்லை. அவளுடைய நடவடிக்கைகள் இயற்கையான குணமா? அல்லது ஓரகத்தி செய்யட்டுமே என்னும் அலட்சியமா?

அவள் கணவனின் சம்பளம் போதவில்லையாம். 'பார்ட்–டைம்' ஆக வேலைக்குப் போக மாமியாரின் அனுமதி கேட்கிறாள். ஆஸ்துமா நோயால் அவதிப்படும் மாமியார், "வீட்டில் சும்மாதானே இருக்கே... போயிட்டு வாயேன்" என்று வாழ்த்துக் கூறி அனுமதித்து விட்டாள்.

அந்த நாளில் – மாமியார் தான் வேலைக்குப் போவதைத் தடுத்த சம்பவத்தை எவ்வளவு ஆண்டுகளானாலும் புவனாவால் மறக்க முடியவில்லை. சந்திரனும் அம்மாவுக்கு ஆமாம் போட்டதையும் அவளால் மறக்க முடியவில்லை.

காலம் எப்படியெல்லாம் மாறுகிறது. ஆனால் மனிதர் மனப்பாங்கு அப்படியேதானே குரூரமாக இருக்கிறது? பெண்ணுக்குப் பெண்ணே விரோதி – புவனா நினைத்துக் கொள்ளும்போது, ஒரு நாளாவது இந்தக் குடும்பத் தொழிற்சாலையை விட்டு மறந்து எங்காவது போகலாமா? எங்கே போவது? சந்திரனுடன் பெட்டியைத் தூக்கிக் கொண்டு ஊர்

ஊராகச் சுற்ற வேண்டியதுதான்.

வீட்டில் எப்போதும் தொழிற்சாலை இரைச்சல்தான். போதாதற்கு தன் கணவருக்குச் சகோதரி முறையாக வேண்டுமாம் – அவளுக்குப் பிறந்த வீட்டு ஆதரவில்லையாம் – பிரசவத்திற்கு இங்கே வந்து சேர்ந்து விட்டாள்.

புவனாவுக்குப்'பூமா' என்னும் பெயர் வைத்திருக்கலாம். பூமாதேவியின் பொறுமை அவளுக்கு.

திட்டமிட்டதற்கு ஒருநாள் முன்பாகவே சந்திரசேகரன், தொழில் நிமித்தம் பயணத்திலிருந்து வந்து விட்டான். அவன் சொன்ன செய்தி புவனாவுக்கு ஆறுதலாக இருந்தது.

"இன்னும் இரண்டு நாள்களில் தூத்துக்குடிக்குப் புறப்படத் தயாராக இரு. ஒரு பெரிய தொழிற்சாலை. அதன் நிர்வாகிகள் என்னை அழைத்திருக்கிறார்கள்" என்றான்.

ஆம்; அதிர்ஷ்ட வாய்ப்புகள் வாழ்க்கையில் பாதிக்கு மேல்தான் சிலருக்குக் கிடைக்கிறது. சந்திரசேகரனின் அனுபவம், ஆற்றல், உழைப்பு இவை எல்லாம் சேர்ந்துப் பெரிய வெகுமதியை அவனுக்கு அளித்தன.

"இரண்டு மூன்று நாள்கள்தாம். நான் ஏதாவது காரணம் சொல்லி உன்னை என்னுடன் வருமாறு செய்கிறேன். இந்த வாய்ப்புப் பிறகு



**வாதாபி கணபதி**

**நா**கை மாவட்டம் நன்னிலத்திலிருந்து 9 கிலோ மீட்டர் தொலைவில் உள்ள திருச்செங்காட்டங்குடியில் எழுந்தருளியிருப்பவர் வாதாபி கணபதி. கஜமுகாசுரனை கணபதி பெருமான் கொன்று பெருகிய ரத்ததால் இம்மண் சிவந்து போனதால் செங்காட்டங்குடி எனும் பெயர் வந்ததாம். பல்லவ தளபதி பரஞ்சோதியால் அமைந்த இக்கணபதியை வழிபட்டால் வறுமை நீங்கும்.

- க.ரவீந்திரன்

## முதன் முதலில்

நடந்தே, முதன் முதலில் உலகை சுற்றி வந்த முதல் எழுத்தாளர் ஸ்டீவன் நியூமென் என்பவர் ஆவார்.

## தெரியுமா?

மனிதன் – சிந்திக்கும் வேகம் நிமிடத்துக்கு 500 சொற்கள் ஆகும். பேசும் வேகம் நிமிடத்திற்கு 100 சொற்கள் ஆகும்.

- முக்கிமலை நஞ்சன்

கிடைக்காது. மனைவியையும் அழைத்து வர அனுமதித்திருக்கிறார்கள். மதுரை வரையில் விமானம். அங்கிருந்து அவர்கள் நம்மை குளுகுளு காரில் அழைத்துச் செல்கிறார்கள். இப்போது நீ வேண்டாம் என்று சொன்னால், கிடைக்கும் வாய்ப்பை தட்டிவிட்டால்... மீண்டும் எப்போது கிடைக்குமோ என்று தெரியாது."

மதுரை என்றவுடன் மதுரை மீனாட்சி, திருப்பரங்குன்றம் முருகன் எல்லாம் புவனாவின் நினைவுக்கு வந்தன.

"மதுரைக்குப் போனால் அங்கே மீனாட்சி–சுந்தரேசுவரர் தரிசனம் செய்யலாமே. எவ்வளவோ ஆண்டுகளாக எனக்கு ஆசை. மதுரைத் தெப்பக்குளமும், திருப்பரங்குன்றம் முருகனும் பத்திரிகையில் படிக்கப் படிக்க ஆவலைத் தூண்டியிருக்கின்றன. அப்புறம் தூத்துக்குடிக்கருகே என்னென்ன கோயில்கள் இருக்கின்றன?" என்று புவனா ஆவலுடனும், பரபரப்புடனும் கேட்டாள்.

"நிறைய கோயில்கள்... செந்தூர், கன்னியாகுமரி..." சந்திரன் சொல்லி வரும்போது புவனா அவன் அருகிலிருந்து எழுந்து நின்று விட்டாள்.

"இங்கெல்லாம் போகிறதென்றால் எனக்கு உங்களுடன் வரச் சம்மதம்" என்று கூறிவிட்டாள்.

"உம்... மதுரையைச் சுற்றிப் பார்க்கலாம், திருச்செந்தூர் போகலாம், கன்னியாகுமரி அம்மனைத் தரிசிக்கலாம். எல்லா இடங்களிலும் கம்பெனியின் விருந்தினர் மாளிகை உண்டு."

"விருந்தினர் மாளிகை, ஹோட்டல் எல்லாம் இருக்கட்டும். என்னை இத்தகுக் கோயில்களுக்கு அழைத்துச் செல்வீர்களா?"

"பேஷா..."

**து**வாரகை

குஜராத் மாநிலத்தில் அகமதாபாத்திலிருந்து ரயில் மார்க்கமாக 378 கி.மீ. தொலைவில் அமைந்துள்ளது. இங்கு கடலில் மூழ்கிப் போன தொன்மையான துவாரகை நகரத்தை ஆராயும் பணி மேற்கொள்ளப்படுகிறது. இந்த ஆராய்ச்சியில் கிடைக்கும் பொருட்களைக் கொண்டு கடலுக்கடியில் ஒரு அருங்காட்சியகத்தை அமைக்க திட்டமிட்டுள்ளனர்.

- க.ரவீந்திரன்

அவனை இழுத்து அணைத்துக் கொள்ள வேண்டும் என்று அவளுக்குத் தோன்றியதா? அவனுக்குத் தோன்றியதா?

ஆசைக்கு வயது வரம்பு உண்டா!

எப்படியோ பயணம் புறப்பட்டாகி விட்டது. சந்திரசேகரன் சொல்லியபடி எல்லாம் நடந்தது.

"ஏன்னா... 'சந்துரு' என்று அழைக்க வேண்டும் என்று எனக்கு ஒரு காலத்தில் ஆசை. இப்போது அப்படிச் சொல் என்றால் கூடச் சொல்ல மாட்டேன். பெயர் சொல்லி அழைத்தால், கணவருக்கு ஆயுசு



குறைவு என்று சொல்லியிருக்கிறார்கள். உங்களை நான் கண்ணின் இமை போல் பாதுகாக்க வேண்டாமா?" – புவனா மெல்லச் சிரித்தாள். ஆகாய விமானத்தில் இவர்கள் பேச்சை யார் கேட்டுவிடப் போகிறார்கள்.

மதுரை விமான நிலையத்துக்குக் கார் வந்தது. சந்திரன் சொன்னதுபோல் வசதியான கார். நேரே தூத்துக்குடி தொழிற்சாலைக்குக் கார் சென்றது.

"மதுரையில் கோயில் பார்க்க வேண்டும் என்று என் ஒய்ப் சொல்லியிருக்கிறார்களே... நீங்கள் பை–பாஸ் சாலை வழியாகச் செல்கிறீர்களே" என்று சந்திரசேகரன், தன்னை வரவேற்க வந்த தொழிற்சாலை அதிகாரியிடம் கேட்டான்.

"ஆகா! அதற்கென்ன? கார் உங்கள் வசம்தான். காலையிலேயே கம்பெனி டைரக்டர்கள் சந்திப்பு. அதுதான் முக்கியம். உங்களுடன் பேசி முடிவெடுத்துவிட்டு, ஜப்பானிலிருந்து வந்த தொழில் நுட்ப வல்லுநர்கள் பகலிலேயே உடனே திரும்பிப் போகிறார்கள். அந்த அப்பாயின்ட்மெண்ட் – டிஸ்கஷன் முடிந்து விட்டால் நீங்கள் 'ப்ரீ'. பிறகு எங்கும் செல்லலாம்" என்று கூறிவிட்டார்.

எதற்காக வந்தோமோ அதை முடிக்க வேண்டாமா? கோயில், குளம் பிறகுதான். மதுரை மீனாட்சியம்மன் திருக்கோயிலுக்குச் செல்ல வேண்டும்; திருப்பரங்குன்றம், திருச்செந்தூர், கன்னியாகுமரி அம்மனைத் தரிசிப்பதுதான் புவனாவின் நோக்கம். அவள் விருப்பத்தையும் நாம் மறுக்கவில்லையே? வந்த அலுவலக வேலை முடிந்தவுடன், புவனா சொல்படிதான் எல்லாம்.

புவனா படித்தவள். தொழிற்சாலை அதிகாரியும், தன் கணவனும் ஆங்கிலத்தில் உரையாடினால் அவளுக்குப் புரியாதா?

'என்னை இங்கேயே இறக்கி விடுங்கள். மீனாட்சி அம்பாளைத் தரிசனம் செய்து விட்டுக் காத்திருக்கிறேன்' என்று சொல்லக்கூடிய மன உறுதி புவனாவிடம் இருக்கிறது. ஆனால் கார் இப்போது தூத்துக்குடியை நோக்கி அன்றோ செல்கிறது. அவள் வாயைத் திறக்கவில்லை. பல ஆண்டுகளுக்குப் பிறகு இதுபோன்ற பயணம் அவளுக்குக் கிடைத்திருக்கிறது! சாலையின் இருபுறமும் பார்த்ததில் அவள் தன் கோபத்தை சற்று மறந்திருந்தாள்.

சந்திரன் இடையிடையே பேச்சுக் கொடுத்துப் பார்த்தான். கடுமையான மௌனம்.

தன்னை அழைத்துப் போக வந்த அதிகாரியிடம் பொதுவாக அவர்கள் நிறுவனத்தைப் பற்றிப் பேச்சுக் கொடுத்துப் பல செய்திகளை அறிந்து கொண்டான்.

அவர்கள் தங்குவதற்கு தொழிற்சாலை விருந்தினர் மாளிகையில் இடம் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. குளுகுளு வசதியுள்ள அந்தப் பெரிய அறையும், பொத்தானை அழுத்தினால் வந்து நிற்கும் பணியாட்களும், ஆறு கால பூஜை என்பது போல் சிற்றுண்டி, உணவு, சிறு பானங்கள், லஞ்ச், டின்னர், பிரேக் ஃபாஸ்ட் என்று புவனாவுக்கு ஓரே பிரமிப்பு.

“இந்த வயதில் எனக்கு எதற்கு இதெல்லாம்? பூஜை செய்யாம நான் தண்ணிகூடக் குடிக்க மாட்டேன்னு உங்களுக்குத் தெரியாதா?” – புவனா மேஜை மீதிருந்த மசால் தோசையை வெறுப்புடன் பார்த்தவாறு சொன்னாள்.

“புவனா! உன்னுடைய ஆசார அனுஷ்டானங்களை இரண்டு நாள்களுக்கு மூட்டை கட்டி வைத்துவிடு. நல்ல காற்று, விடியற்காலையிலேயே எழுந்திருக்க வேண்டுமென்ற அவசரமில்லை. மச்சினி, ஓரகத்தி என்னும் தொல்லையும் இல்லை” என்று சந்திரன் அவளைச் சீண்டியபோது, திடீரென்று ஆவேசம் வந்தவள்போல் புவனா “நானும் உங்களைக் கேட்க வேண்டும் என்று நினைச்சுண்டிருக்கேன். நான் வேலையை விட்டுடணும்னு உங்கம்மா கண்டிப்பா இருந்தாரே... உங்க தம்பியிடம் இந்தக் கண்டிப்பை நிலைநாட்டறதுதானே? அவளுக்கும் சேர்த்து உழைக்க வேண்டியிருக்கு. ஊருக்குப் போனப் பிறகு நான் ஆறு மணிக்குத்தான் எழுந்திருக்கப் போறேன். பால்காரர் வந்தால் நீங்கள் வாங்குங்கோ அல்லது உங்கள் தம்பி மனைவி எழுந்து வாங்கட்டும். நான் ராத்திரி ஒன்பதுக்கே படுத்துண்டுடப் போறேன்”

## நாய் சிலை

உலகப் போரில் நாய்கள் புரிந்த மகத்தான சேவையைப் போற்றும் வகையில் அமெரிக்காவின் வாஷிங்டன் நகரில் நாய் சிலை ஒன்று வைக்கப்பட்டிருக்கிறது.

## பெரிய ரோஜாத் தோட்டம்

ஆசியாவிலேயே பெரிய ரோஜாத் தோட்டம் ‘ஹஜீர் ரோஸ் கார்டன்’ என்பதாகும். இது சண்டிகரில் உள்ள சிவாஜி மலைத் தொடரின் அடியில் அமைந்துள்ளது.

- முக்கிமலை நஞ்சன்

**வி**நாயகர் வீணை வாசிக்கின்ற காட்சியை பவானி சங்க மேஸ்வரர் ஆலயத்தில் காணலாம். வேதநாயகி அம்மன் சன்னதி முன் மண்டப விதானத்தில் இந்த விநாயகர் காட்சி தருகிறார். இந்த மண்டபம் கி.பி.1653-இல் கெட்டி முதலியார் வம்சத்து அரசர்களால் கட்டப்பட்டது.

**- க.ரவீந்திரன்**



என்று சீறினாள்.

"ஆகா; பேஷா! அதைச் செய். இனி நானும் டூர் புரோகிராமை ரத்து செய்துட்டு வந்துடறேன். நீ ஒன்பது மணிக்கே படுத்துக்கப் போறேன்னா நானும் ரெடி."

சந்திரன் சொன்னதைக் கேட்க புவனாவுக்கு ஆத்திரமாக வந்தது. "ஆமாம்... இள வயசு! இனிமேதான் நமக்குப் பதினாறு வயசு சல்லாபம்; வீட்டிலே தனியே படுக்க இடமிருக்கா! அந்தரங்கமாகப் பேச முடிகிறதா?"

"ஏகாந்தமென்று சொல்லு. அதனால்தான் நான் இந்தத் தொழிற்சாலை கெஸ்ட் ஹவுஸுக்கு உன்னை அழைத்து வர ஏற்பாடு செய்தேன். இரண்டு நாள்கள் என்ன... ஒரு வாரமிருக்கலாம். ஏகாந்தம், அந்தரங்கம், தனிமை, ரகசியம் எல்லாம் அனுபவிக்கலாம். என்ன வேண்டும் சொல்லு..." சந்திரன் விளக்கை அணைத்தான். அறையின் மங்கிய நீலநிற ஒளி புவனாவின் முகத்தில் வேதனையையும் ஒருவித எரிச்சலையும் புலப்படுத்தியது.

"விளக்கைப் போடுங்க. எனக்குத் தெரியும் உங்கள் சூழ்ச்சி. விளக்கை அணைக்கணும். அதற்காகத்தானே காத்திருந்தீர்கள். எனக்குத் தூக்கம் வரவில்லை. மணி பதினொன்று இருக்கும். ஊர் நினைவுதான் வருகிறது. உங்க தம்பியின் கடைசி வாண்டுப் பாலுக்கு அழும். அதைச் சமாதானம் செய்யாமல் மகாராணி இரண்டாம் ஜாம உறக்கத்தில் இருப்பாள். 'சனியனே... சனியனே" என்னும் முணுமுணுப்பு மட்டும் கேட்கும். நான் எழுந்து போய் அதைச் சமாதானம் செய்வேன். வெட்கங்கெட்ட ஜன்மம் எடுத்திருக்கா உங்க தம்பி மனைவி. இவையெல்லாம் இல்லாமல்

**ரா**ஜஸ்தான் மாநிலத்தில் இரண்டாவது பெரிய நகரம் ஜோத்பூர். இதை நீல நகரம், சூரிய நகரம் என்ற பெயர்களால் அழைப்பர். ராவ் ஜோதா எனும் ராஜபுத்திரரால் 1459இல் இது நிறுவப்பட்டது. நகரில் மேற்குப் பகுதியில் உள்ள மெஹரங்கா கோட்டை 10 கிலோ மீட்டர் சுற்றுச் சுவரைக் கொண்டது. தரைமட்டத்திலிருந்து 125 மீட்டர் உயரத்தில் உள்ளது. 14 பகுதிகளாக பிரிக்கப்பட்டுள்ள இக்கோட்டையில் மோத்தி மஹால், பூல்மஹால், ஷீஷ்மஹால், தவுலத் கானா, சிலிகானா ஆகிய அரண்மனைகள் உள்ளன. ஒவ்வொன்றும் ஒரு அருங்காட்சியகமாகத் திகழ்கின்றது.

- க.ரவீந்திரன்

எனக்குத் தூக்கம் வராது. கையை எடுங்கோ. பால்யம் திரும்பறதோ!"

"காலையில் 'பால்' என்று பால்காரர் குரல் கேட்கணும். அதைச் சொல்லவில்லையே!"

"வேடிக்கை இருக்கட்டும். இரண்டு நாள்தான் இங்கே தங்கப் போறோம்னு சொன்னீங்க. இப்ப ஒரு வாரங்கறீங்க. சனிக்கிழமை புறப்பட்டு ஞாயிறு வந்துவிடுவதாக அம்மாவிடம் சொல்லியிருக்கேன். திங்கட்கிழமை உங்க தம்பிப் பொண்ணுக்குப் பிறந்த நாள்... ஆயிரம் வேலை எனக்கு இருக்கு."

"வேலை, வேலை... தம்பி பார்த்துக்க மாட்டானா? நீ போய்த்தான் நடக்கணுமா?"

"முடியாது, முடியாது! நான் போகலைன்னா என் தலை



## முதலிடம்

உலகிலேயே அதிக அளவு சர்க்கரை, வாழைப்பழம், முந்திரிப் பழம், தேங்காய், தக்காளி உற்பத்தி, சினிமா படங்கள் தயாரிப்பு, டிராக்டர் தயாரிப்பு ஆகியவற்றில் முதலிடம் வகிப்பது இந்தியாதான்,

## டைவர்

கடலின் ஆழமான பகுதியில் தொலைந்து போன பொருட்களை தேடிக் கண்டுபிடிக்க உதவு பவர்களுக்கு 'டைவர்' என்று பெயர்.

**- முக்கிமலை நஞ்சன்**

*உருளும். புறப்படும்போதே 'பெரியம்மா ஹனிமூனுக்குப் போறான்னு அந்தச் சின்ன வாண்டு கத்தியது. அதுவா சொன்னது? உங்க தம்பி மனைவி சொல்லிக் கொடுத்திருப்பா... தம்பி மனைவி பக்கத்து வீட்டுக்காரியிடம் ஏதோ சொல்லிச் சிரிச்சிண்டிருந்தா..."*

*"சின்னச் சின்ன விஷயத்துக்குக் கவலைப்படாதே புவனா! ஒரு வேலையும் இல்லாம நாள் முழுவதும் இந்த ரூமிலேயே உன் பக்கத்திலேயே இருக்கணும்னு எனக்கு ரொம்ப நாள் ஆசை."*

*"முடியாது... முடியாது. இந்த ஜன்மத்திலே இல்லை; அடுத்த பிறவியிலே ஒருவேளை..."*

*"ஓ! அடுத்தப் பிறப்பிலேயும் உன் கணவரா நான் வரணும்னு நீ விரும்பறயா புவனா..."*

*"ஏன்? அதிலே என்ன சந்தேகம்? உங்களைக் கல்யாணம் பண்ணிக்கணும்னு நான் என் வீட்டில் எவ்வளவு பிடிவாதம் பிடிச்சிருப்பேன் தெரியுமா? இப்போழுதுபோன்ற காலமா? அப்ப ஒரு பாரதி பாட்டுப் பாடினால் கூடக் குற்றம். இப்பத்தான் பாரதியைப் புரிஞ்சிக்க ஆரம்பிச்சிருக்கா. இருபத்தைந்து வருடங்கள் எப்படி ஓடி மறைந்தன? நான் என்னென்னவோ கனவு கண்டேன். உங்கள் மீது ஆசைப்பட்டு, குளக்கரையிலும் கோயில் பிராகாரத்திலும் சந்திக்கும்போது நான் கண்ட கனவு பொய்யாய்ப் பழங்கதையாய்க் போய்விட்டது சின்ன வயசுலேயே. இருபது வயதிலே குடும்பப்பாரம் ஏத்துண்டேன். இப்பப் பெண்ணுக்கு இருபது வயசுன்னா 'குழந்தை... குழந்தை'ன்னு செல்லம் கொடுக்கறா... இருபத்தெட்டு முப்பது வயசாகும் போதுதான் கல்யாண நினைவே வருது" – புவனா மேடைப் பிரசங்கிபோல் மூச்சுவிடாமல் பேசியதைக் கண்டு சந்திரன் வியப்படைந்தான்.*

“புவனா பழைய கதையை எல்லாம் ஏன் இந்த இன்ப வேளையில் நினைத்து வேதனைப்படறே?” என்று சொல்லி அவளைத் தன் பக்கமாகத் திருப்பித் தன் காலை அவள் கால் மீது போட முயன்றபோது “உச்... அதெல்லாம் ஒண்ணும் வேண்டாம். இரண்டு பிள்ளை பிறந்த உடனே ஒரு பொண்ணு வேணும்னு ஆசைப்பட்டீங்க... பொண்ணு பிறந்ததிலே எவ்வளவு கஷ்டம்?”

“நான் மட்டும்தான் ஆசைப்பட்டா நடந்திடுமா?”

“ நானும்தான் ஆசைப்பட்டேன்னு வச்சுக்கோங்க... கல்யாண வயசுலே நமக்கு ஒரு பொண்ணு இருக்காங்கறதை மறந்துட்டீங்க. அவ இருக்கும்போது நாம் ஏகாந்தமா, அந்தரங்கமா இங்கே சல்லாபிக்கலாமா? உங்களைக் கல்யாணம் செஞ்சுக்க நான் முற்பிறவியில் கொடுத்து வைத்திருக்க வேண்டும். அதைப் போலவே இனி அடுத்தப் பிறவியிலும்...” புவனா இப்பொழுது அவன் மார்பின் மீது முகத்தைப் புதைத்திருந்தாள். அவள் தலையைக் கோதியவாறு சந்திரன் கேட்டான்: “சரி, இன்னோர் ஆசையைச் சொல்லவில்லையே!”

புவனா மெல்லச் சிரித்தாள். பிறகு சிறிது நேரம் மௌனமாக இருந்தாள். “ இந்த ஆசையை சர்வேச்வரன்தான் நடத்தி வைக்க வேண்டும். நோய்நொடியின்றி இழுத்துண்டு நாள் கணக்காகப் படுக்கையில் கிடக்காம உயிர் போயிடணும்.”

“உனக்கு மட்டும்தான் அந்த ஆசையா? உலகிலே எல்லாரும் அதைத்தான் விரும்புவார்கள். படுத்துக்கணும்; தூங்கணும்; தூங்கும்போது அப்படியே உயிர் போயிடணும். அதுவே என் பிரார்த்தனை.”

புவனா சிரித்தாள். “எல்லாருக்கும் அது கிட்டுமா? நோயோ, நொடியோ, பெண் ஜென்மமாய்ப் பொறந்த நாங்க சுமங்கலியாய் போய்ச் சேரணும். அது என் தினசரிப் பிரார்த்தனை. உங்களுக்குத் தெரியுமா? என் அம்மாவெல்லாம் புவனேச்வரி ஸ்லோகம் சொல்லிவிட்டு அதைத்தான் வேண்டிக் கொள்வாள். அவள் வேண்டுதல் பலித்தது.”

சந்திரன் திடுக்கிட்டான். “ என்ன புவனா இது? சுவாமிகிட்டே இதைத்தான் தினமும் வேண்டிக் கொள்கிறாயா?”

“ஆம்மாம்... சுமங்கலியா சாகக் கொடுத்து வைச்சிருக்கணும். அது ஆம்பளைங்களுக்குத் தெரியாது.”

“இது, ரொம்பவும் ஸெல்ஃபிஷ்.”

"ஏன்?"

"நீ செத்துப் போய் நான் இருக்கணுமா?"

சந்திரன் குரலில் பரிதாபம் ஒலித்தது. "புவனா! நீ நெஞ்சைத் தொட்டுச் சொல்லு. உனக்கு ஏன் இப்படி வஞ்சகத்தனம்? நீ செத்துப்போய் நான் திண்டாடணுமா? அதுதான் உன் ஆசையா, பிரார்த்தனையா?" சந்திரன் குரல் தழுதழுத்தது.

'மெய்யாகவே அவர் வருத்தப்படுகிறார். பயப்படுகிறார். நான் இப்படி பளீரென்று வெளியே சொல்லியிருக்கக்கூடாதோ?' ஆனால் புவனாவின் முகத்தில் ஒரு வெற்றிப் பெருமிதம் கூத்தாடியது. 'பெண்மை வெல்கவென்று

இந்தியர்கள் நேபாளம் செல்ல விசா தேவையில்லை. அடையாள அட்டை கொண்டு சென்றால் போதும். நேபாளத்தின் தலைநகர் காத்மாண்டுவில் உள்ள சுவயம்புநாத் கோயில்.

- க.ரவீந்திரன்



கூத்திடுவோமடா' என்று முணுமுணுத்தாள்.

அந்த அறையில் பிறகு நிசப்தம் நிலவியது. சந்திரன் குறட்டை விடும் ஓசை கேட்டது. எவ்வளவு வருடமானாலும் மாறாத அவனது களங்கமற்ற முகத்தைப் பார்த்து மெல்ல முறுவலித்துவிட்டு 'பாவம்; நான் இல்லாவிட்டால் இவரால் ஒன்றுமே செய்து கொள்ள முடியாது. எனக்குத் தெரியும். குளிக்கப் போறதிலே இருந்து அன்றன்று உடுத்திக் கொள்ள உடை எடுத்துக் கொடுத்து நாவிற்கு ருசியானதைப் பார்த்துப் பார்த்துச் செய்து போடறது வரை நான் இருந்தாகணும். ஊருக்குப் போகும் திட்டத்தை நான் வகுக்க வேண்டும். நான் இல்லாவிட்டால் இவர் என்ன செய்வார்? என்னும் நினைவிலேயே உறங்கிப் போனாள்.

## 3

சந்திரனின் தாயார் இறந்துவிட்டார். ஆல மரமொன்று வேரோடு சாய்ந்தாற் போன்று புவனா கதறிக் கதறி அழுதாள். சந்திரனுக்குத் தன் தாயார் இறந்த வருத்தத்தை விட புவனா இடி விழுந்தது போல் அதிர்ச்சியடைந்து, துக்கம் தாங்காமல் வருபவர் போகிறவர்களிடம் சொல்லிச் சொல்லி அழுததைச் சந்திரனாலேயே தாங்கிக் கொள்ள முடியவில்லை.

வயதாகி விட்டது. மற்றவருக்குப் பாரமில்லாமல் போய் சேர்ந்தாள். 'பெரிய சாவு என்று தேற்றிக் கொள்' என்று பலவிதமாகச் சமாதானம் கூறியும் புவனாவினால் பொங்கி வரும் துக்க அலைக்கு அணை போட முடியவில்லை.

பாட்டி இறந்ததற்கு சந்திரனின் பிள்ளையால் டில்லியிலிருந்து வர முடியவில்லை. தன் மகனை அனுப்பியிருந்தான். ஆஜானுபாகுவாக வாட்டசாட்டமாக வளர்ந்திருந்த தன் பெயரனைப் பார்த்தவுடன் புவனாவின் அழுகை இன்னும் அதிகமாகியது.

அவனுக்குத் தமிழ்ப் பேசவே வரவில்லை. நவநாகரிக டில்லியிலேயே இதுவரை வாழ்ந்துவரும் அவனுக்கு இதுபோன்ற அழுகை; துக்கம் கேட்க வருபவர்கள் வரும்போது மறுபடியும் தன் பாட்டி – புவனாவின் – ஓலம் அவனுக்கு நாகரிகமாகத் தோன்றவில்லை.

மறுநாளே ஊருக்குப் போகத் துடித்தான். தன் பாட்டன் – சந்திரனைத் தனியே அழைத்து, "உங்களிடம் பிளைட் சார்ஜுக்கு அப்பா பணம்



வாங்கிக் கொள்ளச் சொன்னார்" என்று கூறியபோது அவனை ஓங்கி அடித்துவிடும் ஆவேசம் சந்திரனுக்கு ஏற்பட்டது.

பெயரன் சொன்னதைக் கேட்டுக் கொண்டு வந்த புவனா, தன் அழுகையை நிறுத்தி பெயரனைத் தனியே அழைத்து "இந்தா... ஐயாயிரம் ரூபாய்! இவ்வளவுதான் என்னிடமிருக்கிறது. இனியாவது கொஞ்சம் பாட்டி – தாத்தாவிடம் ஒட்டிக் கொண்டு பாசமாக இருக்கக் கற்றுக்கொள்" என்றாள்.

தன் பாட்டி புவனாவை அவன் அதிர்ச்சியுடன் பார்த்தான். பாசம் என்பது

நேபாளத்தில் காட்மண்டுவில் உள்ள சுவயம்புநாத் பௌத்த கோயில் 'குரங்கு கோயில்' என்ற பெயரிலும் அழைக்கப்படுகிறது.

- க.ரவீந்திரன்

என்னவென்று தெரியாமல் வளர்ந்து விட்டான். படிப்பு, மேல்படிப்பு, வெளிநாட்டுப் படிப்பு என்று தன் தந்தையால் உயர்ந்த படிப்பு – பெரிய வேலை – நிறைந்த சம்பளம் என்ற இலட்சியத்துடன் பழகியவன், ஒரு நொடியில் தன் பாட்டி புவனாவின் பாசத்தில் நெகிழ்ந்துப் போனான்.

“மீதி நாள்கள் காரியத்திற்கு என்ன செய்வது என்று கையைப் பிசைந்துக் கொண்டிருக்கிறேன். நீ ஐயாயிரம் விமான டிக்கெட்டுக்குத் தருகிறாய். பாசம் என்பது பணம் கொடுத்து வாங்குவதா?” என்று கூவினான் சந்திரன்.

“ஆமாம்... இனி பாசத்தை விலை கொடுத்துத்தான் வாங்க வேண்டும். ஆறுபதாவது ஆண்டு நிறைவுக்கு நம் சொந்தக்காரர்கள் வர வேண்டாமா? நமக்கு இனிப் பெரியவர்கள் என்றில்லை. நாம் பணத்தை வைத்துக் கொண்டு என்ன செய்யப் போகிறோம்?” என்று புவனா ஒரே வார்த்தையில் சந்திரனுக்குப் பதில் சொல்லிச் சமாதானப்படுத்தி விட்டாள்.

அவளுக்கு இதுவரை பந்தபாசத்தின் ஒட்டுதல் இல்லாமலிருந்தது. மூத்த மகளைப் பிரசவத்தின்போது பறிகொடுத்து விட்டாள். இளைய மகள், தன் கணவரை சாலை விபத்தில் இழந்து தாய்வீடே கதி என்று வந்து விட்டாள்.

அந்தத் துக்கங்களைத் தாங்க அவளுக்குப் பராசக்திதான் வலிமையையும், தெம்பையும் கொடுத்திருந்தாள். வாழ்க்கையின் பற்றுதல் அவளிடம் குறைந்து வந்தது.

சந்திரனின் தம்பியும் மனைவியும் வேறு ஊருக்கு மாற்றலாகி சென்று விட்டார்கள். அறுபதை நெருங்க நெருங்கப் புவனாவுக்கு இனி வாழப் போகும் வாழ்க்கையில் பயம் ஏற்பட்டது.

### சர்க்கரை

**ச**ர்க்கரையைக் குறிக்கும் இராசயனப் பெயர் Cho (ஷோ) ஆங்கிலத்தில் இது Sugar என்று வழங்கப்படுகிறது. விஞ்ஞானப் பெயராக சுக்ரோஸ் (Sucrose) என்று கூறுவார்கள்.

### துருவக்கரடி

**இ**வ்விலங்கு மழைக்காலத்தில் மாமிச உணவையும் கோடை காலத்தில் தாவர உணவையும் உண்கிறது.

- முக்கிமலை நஞ்சன்

சஷ்டியப்தப் பூர்த்தியை விமரிசையாகக் கொண்டாட நினைத்தவளின் எண்ணம் ஈடேறவில்லை. கடைசி நிமிடத்தில் திருக்கடவூர் அபிராமி கோயிலுக்குச் சென்று அங்கே அபிராமியின் கருணைவிழிகள் கொண்ட சந்நிதியில் கொண்டாடினார்கள். உற்றார்-உறவினர் யாரும் வரவில்லை.

'ஆகா! இனி எனக்கு என்ன வேண்டும்? வாழ்க்கையின் கடைசிக் காலம் நெருங்கிக் கொண்டிருக்கிறது. இறங்க வேண்டிய ரயில் நிலையம் வந்து கொண்டிருக்கிறது. வண்டி ஒரு நிமிடமோ, இரண்டு நிமிடங்களோதான் நிற்கும். அதற்குள் இறங்கி விட வேண்டும். கும்மிருட்டோ, விடியற்காலையோ, கொட்டும் மழையோ... ரயில் நிலையத்தில் இறங்கித்தானே ஆக வேண்டும்.

சந்திரனுக்குக் கதாகாலக்ஷேபம், உபதேசம் இவற்றின் மீது சிரத்தை இல்லை. சீட்டாடுவது போன்ற பழக்கமும் கிடையாது. தொழில் அனுபவத்தை அறிந்து ஆலோசனைக் கேட்கப் புதிதாகத் தொடங்கும் நிறுவனங்களின் உரிமையாளர்கள் வருவார்கள்.

"வீட்டிலே உட்கார்ந்துப் பேச வசதியில்லை. நான் யோசனை சொன்னேன். நாங்கள் குடியிருந்த தெருவின் முனையில் அறை யொன்று வாடகைக்கு வந்தது. குறிப்பிட்ட நேரத்திற்கு அங்கே சென்று பேசுங்கள். ஆலோசனைக் கூறுங்கள். மறக்காமல் யோசனை கூறியதற்குக் கட்டணம் வாங்கி விடுங்கள் என்று அவருக்கு வழி காட்டினேன்."

## காதல்

**கா**தல் கொள்ளாத
கண்கள்...
கற்றுக் கொள்ளாத
பாடம்...
ஆசை இல்லாத
வாழ்க்கை...
சபலம் இல்லாத
நாட்கள்
'சப்'-பென்று
இருக்கிறது!
நீயும்
காதல் கொள்ளேனடி...

***

கன்னத்தில்
நீ தந்ததை
மறக்க முடியவில்லை
முத்தமல்ல;
'அறை' என்பதால்!


***

வாழையடி
வாழையாய்
வாழும் உறவு
என்பதாலா...
உறவை
வெட்டிவிடுகிறாய்?

***

மனச்சிறையில்
அடைபட்டு கிடக்கும்
காதல் குற்றவாளி
நான்!
தண்டனை மட்டுமே
தந்துவிடு;
நீதிபதி நீ என்பதால்...

- தமிழ்நாயகி,
சேலம்



"நீயே பலருக்கு யோசனை சொல்லலாமே!" என்றான் சந்திரன் சிரித்துக் கொண்டே.

"நாம் உடலுக்கும் உள்ளத்திற்கும் புத்துணர்ச்சியூட்டு வகையில் ஏதாவது செய்ய வேண்டும். மாதர் சங்கங்கள் தொடங்கலாம். தொடக்கத்தில் சில மாதங்கள் உற்சாகமாக வருவார்கள். பணம் சேகரிக்கும் எண்ணம் ஏற்படும். தலைவி, செயலாளர், பொருளாளர் என்னும் பதவிகள் அமையும். வேண்டாம், வேண்டாம். சங்கங்களைப் பற்றி என் கருத்து நியாயமற்றதாகவும் இருக்கலாம். எனக்கு அதில் ஈடுபாடு இல்லை. ஆண்டு முழுமையும் மாலை ஆறு முதல் எட்டு மணி வரையில் பக்திச் சொற்பொழிவுகள் நடைபெறுகின்றன. மனதில் பதியும் வண்ணம் மிகச் சிறப்பாகப் பேசுகிறார்கள். அவற்றைக் கேட்டுக் கொண்டிருந்தால் போதும். மனத்துக்குப் புத்துயிர்; உடலுக்குப் புது உற்சாகம். அதுபோதும். ஒரே ஓர் ஆசை. வடநாட்டுத் தலங்களுக்கு யாத்திரை செல்ல வேண்டும்

Ek50 Exo கணினி மூலம் கட்டுப்படுத்தப்படும் ஒரு ஹைடிராலிக் இயந்திரம் இதன் மூலம் முடக்கு வாதத்தால் பாதிக்கப்பட்டவர்கள் நடக்க முடியும். இது அவர்களுக்கு ஆரோக்கியத்தையும் பலசாலி என்ற எண்ணத்தையும் அளிக்க கூடியது. விரைவில் இது உலகளவில் விற்பனைக்கு கிடைக்குமாம்.

– க.ரவீந்திரன்

என்பது. பத்தாயிரம், இருபதாயிரம் என்று செலவுக்கு வேண்டும். நாம் இருவரும் புறப்படுவோம். அதற்குக் கொஞ்சம் கொஞ்சமாகத் திட்டம் வகுப்போம். பணம் சேர்த்து வருகிறேன். நீங்களும் யோசனை கூறுவதன் மூலம் வரும் பணத்தில் கொஞ்சம் தாருங்கள்" – புவனா தன் கருத்தை, திட்டங்களை மிக அமைதியாகத் தெளிவாக விவரித்தாள்.

சந்திரனுக்கு ஏற்பட்ட வியப்புக்கு அளவில்லை. புவனாவைக் குடும்பச்சூழலில் சிக்காமல் அவளை மேலே படிக்க வைத்திருக்கலாம். ஒருவரோடு ஒருவர் மிகவும் காதல் உணர்வும் பாசமும் கொண்டிருந்தாலும், குடும்பச் சூழ்நிலை காரணமாகவும் தன்னுள் எழுந்த உணர்ச்சியை அவள் வெளிப்படுத்தவில்லை. சிதம்பரத்திலேயே இருந்திருந்தால், ஒருவேளை அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் சேர்ப்பதற்கு முயன்றிருக்கலாம். ஹூம்... இப்போது நடந்து போனவற்றை நினைத்துச் 'செய்திருக்கலாம், போயிருக்கலாம்' என்று நினைத்து என்ன பயன்? இப்போது நடப்பதைப் பார்ப்போம்.

அவனுக்கு இப்போது கண் எதிரே கவலை உருவாக நிற்பது, கணவனை இழந்த இருபத்தைந்து வயதைத் தாண்டாத இரண்டாவது மகள். அவளுடைய எதிர்காலத்திற்கு ஏதாவது வழி செய்தாக வேண்டும். அப்பா, அம்மாவிற்குத் துணையாக இருப்பதற்காக அவளை வீட்டோடு வைத்திருப்பது அவனுக்குப் பிடிக்கவில்லை.

“உங்கள் சிந்தனையேதான் என்னுடையதும். நாம் ஒவ்வொருவரும் நம் மீதுமுள்ள வாழ்நாளைப் பற்றியே சிந்திக்கிறோம். கண் எதிரே தம் கவலையை மறந்துவிட்டுச் சிரித்துப் பேசியும், சோம்பல் பாராது உழைத்தும் வாழ்க்கையை நெஞ்சக்கனலுடன் கழிப்பதைப் பற்றி சிந்திக்கவில்லை” என்றாள்.

சந்திரன் மௌனமாயிருந்தான். இரண்டு நாள்கள் கழித்து இளையமகள் சீதா, அம்மாவிடம் முதலில் தன் எண்ணத்தைத் தெரிவித்தாள்.

சந்திரன் மௌனமாயிருந்தான். இரண்டு நாள்கள் கழித்து இளையமகள் சீதா, அம்மாவிடம் முதலில் தன் எண்ணத்தைத் தெரிவித்தாள்.

சீதா என்று பெயர் வைக்கும்போதே யாரோ சொன்னது புவனாவிற்கு நினைவுக்கு வந்தது – இதிகாசச் சீதாவைப் போல் இவள் கஷ்டப்பட வேண்டுமா?” என்று சொன்னபோது – புவனா

தொடர்ச்சி 34-ம் பக்கம்

31-ம் பக்கத் தொடர்ச்சி சிரித்தது நினைவில் இருக்கிறது.

"பெயரில் என்ன இருக்கிறது? சீதா என்னும் பெயரில் புகழும் செல்வமும் பெற்றவர்கள் பலர் இருக்கிறார்கள். இது என்ன சென்டிமென்ட். கண்ணகி, மாதவி, திரௌபதை என்று பெயர் வைக்கத் தயங்குகிறார்களா? டெலிபோன் டைரக்டரியை எடுத்துப் பாருங்கள். சில பெயர்கள் பக்கம் பக்கமாக இருக்கும். மூட நம்பிக்கை என்பது இதுதான்" என்று கோபப்படாமல் பதில் சொல்லியிருக்கிறாள். என்ன இருந்தாலும் அவள் அந்த நாள் எஸ்.எஸ். எல்.சி. படித்தவள்! பிறகு கற்றது, கேட்டது, அறிந்தது என்று தன் பொது அறிவை, உறுதியான முடிவுகளை வளர்த்துக் கொண்டாள்.

சீதா சொல்லிய யோசனை அவளுக்குப் பிடித்திருந்தது. கல்லூரிக்குச் செல்லாமல் அஞ்சல்வழி கல்வி மூலம் கற்பது, கணினி அப்போது பிரபலமாக இல்லை. அறிவியல், பொறியியல், ஆராய்ச்சி என்னும் கல்விப் பகுதிகள் பிரபலமாகியிருந்தன. இன்று கணக்குத் தணிக்கையாளர் போதுமான அளவிற்கு இல்லை என்கிறார்களே, அந்தத் துறையை வளரவிடாமல் மிகக் கடுமையான கட்டுப்பாடு.

சீதா சொன்னதைச் சந்திரனிடம் சொன்னாள் புவனா. எந்தவித விவாதமுமில்லாமல் அவன் ஒப்புக் கொண்டான். "முதலில் பி.ஏ. பிறகு கணக்கியலுடன் கூடிய பட்டப்படிப்பு என்று படிக்கட்டும்" என்றான்.

அமைதியாக மனத்திற்குள் நொந்தவாறு இருந்த சீதாவுக்கு ஓர் ஒளி வழி தோன்றியது.

## 4

புவனா கீழே பாயில் படுத்துக் கொண்டிருந்தாள். அவ்வளவு வருட உழைப்பினால் கிடைத்த வருமானம் குடும்பம் நடத்தவே சரியான நிலையில், ஒரு கட்டில் – மெத்தை இதுவரை அவர்களால் வாங்க முடியவில்லை. வெளுப்பும், கறுப்புமாக இழை ஓடிய கூந்தல், எண்ணெய் கண்டு ஒரு மாதமாகி நெற்றியிலும் தோளிலும் அலைபாய்ந்து கொண்டிருந்தது. நெற்றியில் எப்போதும் பளிச்சென்று துலங்கும் குங்குமம், சோபை இழந்திருந்தது. வட்டக்கரிய விழி என்று சந்திரன் புகழும் விழிகள் குழி விழுந்துக் காணப்பட்டன.

அருகே ஒரு பிய்ந்த விசிறி, மருந்துப் பாட்டில்கள், ஜபமாலை,



சிக்குப்பிடித்த தலையணை, கால்மாட்டில் பழைய 'பின்னி' கறுப்புச் சிவப்புப் போர்வை சுருண்டு கிடந்தது.

சந்திரன் அவள் அருகே உட்கார்ந்து ஒரு கடிதத்தைப் படித்துக் கொண்டிருந்தான். சந்திரனை ஒருமையில் அழைக்க மனம் வரவில்லை. வயது அறுபதைத் தாண்டிவிட்டது. தலை கிராப்புப் போன இடம் தெரியவில்லை. வழுக்கை வியாபித்திருந்தது.

எட்டாம் நூற்றாண்டில் கட்டப்பட்ட மஹாபலிபுரம் கடற்கரை கோயிலை பாதுகாக்க 1900 இல் தொல்பொருள் இலாகாவினர் ஒரு சிறு தடுப்புச் சுவர் கட்டினார்கள். 1940–இல் மேலும் பெரிய கற்களை வைத்து தடுப்புச் சுவரை பலப்படுத்தினார்கள். 1970களில் பெரிய தடுப்புச் சுவர் கடலில் கட்டினார்கள். இக்கோயில் அழிந்து போகாமல் தடுப்பதற்குரிய திட்டங்களை நிறைவேற்றி தொல்பொருள் இலாகாவினர் தொடர்ந்து முயற்சிகள் மேற்கொள்கின்றனர்.

- க.ரவீந்திரன்

“உன் பிள்ளை டில்லியிலிருந்து உன்னை விசாரித்து ரொம்பவும் வருத்தப்பட்டிருக்கான்.”

“ஏதாவது பணம் அனுப்பினானா?” – புவனா மெல்லிய குரலில் கேட்டாள். கண்களில் ஓர் எதிர்பார்ப்பு; பாசம்.

“பணமா? அவன் எழுதியிருப்பதைப் பார்த்தால் நான்தான் அவனுக்கு அனுப்ப வேண்டும் போலிருக்கு. வீடு பிடிப்பதற்குப் பகடி, அபார்ஷன் ஆன மனைவிக்கு மெடிக்கல் செலவு, பையனை – உன் பேரப் பிள்ளையை – மேலே படிக்க வைக்கச் செலவு என்று பட்டியல் போட்டிருக்கிறான்.”

“அவனைத்தான் நம்மால் உயர்தரப் படிப்புப் படிக்க வைக்க முடியவில்லை. டில்லியில் நிறைய வசதியிருக்கிறது என்று சொல்கிறார்கள். தெற்கத்திக்காரா நாம்தான் புத்திசாலி என்று தம்பட்டம் அடித்துக் கொள்கிறோம். இந்திவாலாவோ, பெங்காலிக்காரரோ... பாருங்கள் அவர்கள்தான் அரசாங்கப் பதவி வகித்து உலகப் பணக்காரர்கள் வரிசையில் முக்கிய இடம் பிடித்துக் கொள்கிறார்கள். நாம் பழங்கதை பேசுவதில்தான் கெட்டிக்காரர்கள்” என்று தன் கருத்தைப் பொழிந்தவள் சற்றுத் தன்னை அமைதிப்படுத்திக் கொண்டு...

“உம், பிள்ளைகளால் நமக்கு எந்தவித உதவியுமில்லை. இப்படி இரண்டு மாசமாகக் கிடக்கிறேனே... எனக்கு உங்களைத் தவிர யார் உதவி? அந்தப் புவனேச்வரி கண் திறக்க மாட்டேங்கறாளே? தள்ளாமை தொடங்கிவிட்ட வயசுக் காலத்திலே உங்களுக்குப் பணிவிடை செய்யறதுக்குப் பதிலா உங்களைத் தொந்தரவு படுத்தறேனே? சோதனை பண்ணாமே கண் திறந்து என்னைப் பூவும் பொட்டுமா அவள் அழைச்சுக்கக் கூடாதா?”

“புவனா! இப்படி பேசக்கூடாதுன்னு எவ்வளவு முறை சொல்லிட்டேன்! உனக்கு நான் பணிவிடை செய்தா என்ன? எனக்கு நீ செய்தா என்ன? இரண்டும் ஒண்ணுதான். உனக்கு வந்த வியாதி எனக்கு வந்தால் நீ உதவப் போறே...”

“வேண்டாம், வேண்டாம். இந்த மாதிரி வியாதி ஒருத்தருக்கும் வர வேண்டாம். ஐயோ... படுக்கையிலேயே எல்லாம். குளித்து ஒரு மாசமா யிருக்குமா? என்னைப் பூவும் பொட்டுமா அன்னை சீக்கிரம் அழைச்சுக்கணும்” – அவள் சிறிது மௌனமானாள்.

“இருந்தாலும் நீங்க என்னோட இருக்கறதே ஒரு தெம்பு. நீங்க

மும்பையைச் சேர்ந்த அர்சான் கம்பட்டா பழைய சாமான்களிலிருந்து சிற்பங்களை வடிக்கும் கலையில் தேர்ந்தவர். அவர் வடித்த கோடீஸ்வரன் நிகழ்ச்சியில் கலந்து கொள்ளும் அமிதாபச்சன் வடிவம் இது.

- க.ரவீந்திரன்



இல்லாவிட்டால்... நீங்களே சொல்றது போல என் கதி?"

கையில் வைத்திருந்த கடிதத்தைப் புவனா மேல் வீசிப்போட்ட சந்திரன் கோபத்துடன், "நீ சொல்வதையே சொல்லிண்டு இரு. உன் பிரார்த்தனை நிறைவேறக் கூடாதென்று நானும் முருகனை வேண்டிக் கொள்கிறேன். 'அப்பா, சாமிநாதா! பழனியாண்டவா! செந்தில் ஆண்டவா! திருத்தணிகேசா! தில்லை அம்பலவாணா! நோய்நொடி வராமல் உன் திருவடிகளைச் சேர வைத்துடுப்பா. எனக்குத் தண்டனை தந்துச் சோதனை செய்யாதே! அவ போய் நான் உயிரோடிருக்க என்னை யார் பார்த்துப்பா? எனக்குன்னு ஒண்ணும் செஞ்சுக்கத் தெரியாமலேயே பழகிட்டேனே. குளிக்க வெந்நீர் எடுத்து வைப்பதிலிருந்து இலையில் சாதம் போடற அளவிலிருந்து, உடுத்திக் கொள்ள உடையிலிருந்து அவ இல்லாம எனக்கு ஒன்றும் தெரியாதே! அவ போயி நான் உறவினர்களிடம் அகப்பட்டுண்டு திண்டாடணுமா? நீ புவனேஸ்வரியையோ, அதிலாண்டேச்வரியையே வேண்டிக்கோ. நான் சுப்ரமண்ய சுவாமியை வேண்டிக் கொண்டுதான் இருக்கிறேன். அம்மா ஜெயிக்கிறாரா, பிள்ளை ஜெயிக்கிறாரா பார்க்கலாம்!"

"இதோ பாருங்கோ, நீங்க வருத்தப்படுவது புரிகிறது. உங்களுக்கு என்ன குறைவு? பூர்விக சொத்திலேர்ந்து எனக்குக்கிடைச்ச பணம் பிக்செட்டில் இருக்கு. அது பற்றி யாருக்குமே தெரியாது. வட்டியைக் கூட அசலிலேயே சேர்க்கச் சொல்லிட்டேன்.

உங்களுக்குத் தெரியாததா? நினைவிருக்கோ இல்லையா? எனக்குப் பிறகு உங்களுக்குத்தானே அந்தப் பணம்? வர்ற வட்டியை வீசினா ஆயிரம் பேர் 'நான், நீ' என்று உதவ ஓடி வருவார்கள். நம்மிடம் காசு பணம் இல்லைன்னு உற்றார், உறவினர் நினைச்சுண்டிருக்கா. அதனால கிட்ட வராம இருக்கா. இப்பவே ஒரு பேனா கொடுங்கோ. எனக்குப் பிறகு உங்களுக்குத்தான் அந்தப் பணம்னு எழுதிக் கொடுத்துடறேன்" – அவள் கண்களைத் துடைத்துக் கொண்டாள்.

சந்திரனும் தழுதழுத்தக் குரலில், "பெரிய பணக்காரின்னு ரொம்ப அலட்டிக்காதே! சீ அசடு... இப்ப என்ன அதைப் பத்தி? மரண பயம் எப்பவும் கூடாதுன்னு சாஸ்திரம் சொல்றது. நாளை நடப்பதை யாரறிவா? இப்பத்தான் உடம்பு கொஞ்சம் கொஞ்சமாகச் சரியாயிண்டு வரது.



உலகின் மிகப் பெரிய ஏசு கிறிஸ்து சிலை போலந்து நாட்டில் உள்ளது. இதன் உயரம் 108 அடி. இந்தியாவில் பெங்களூருவில் வீரண பால்யா என்ற இடத்தில் 29 அடி உயர ஏசு சிலை உள்ளது. கேரள மாநிலம் திருவனந்தபுரத்தில் 335 அடி உயரத்தில் ஒரு சிலை எழுப்பப்பட்டுள்ளது. 22.5 அடி உயர பீடத்தில் உள்ள இந்த சிலையின் மொத்த உயரம் 56 அடி. மாலன்காரா சிரியன் கத்தோலிக் சர்ச் நடத்தும் மார் பேஸ்லியஸ் காலேஜ் ஆப் இன்ஜினியரிங் அண்ட் டெக்னாலஜி வளாகத்தில் இது உள்ளது. 2009 இல் கார் விபத்தில் இறந்த இந்த கல்லூரி மாணவன் மிதுன் மார்க்கோஸ் நினைவாக இந்த சிலை எழுப்பப்பட்டுள்ளது. 3 டன் எடையுள்ள கண்ணாடி இழையால் இது உருவாக்கப்பட்டுள்ளது.

– க.ரவீந்திரன்



**1903**-இல் இயற்பியலுக்கான நோபல் பரிசு பிரான்சை சேர்ந்த மேரிக்யூரிக்கும் அவரது கணவர் பியரி க்யூரிக்கும் வழங்கப்பட்டது. 1911-இல் மீண்டும் மேரிக்யூரி வேதியலுக்கான நோபல் பரிசு பெற்றார். 1935இல் வேதியலுக்கான நோபல் பரிசு பியரி க்யூரி - மேரி க்யூரி ஆகியோரின் மகள் ஐரின் க்யூரிக்கும் அவரது கணவர் ஃபிரெட்ரிக்கிற்கும் கிடைத்தது. படத்தில் பியரி க்யூரி, ஐரின்க்யூரி(சிறுவயது) மேரிக்யூரி ஆகியோரைக் காணலாம்.

- க.ரவீந்திரன்

இப்பத்தான் ஜாக்கிரதையா இருக்கணும். நான் முதலா, நீ முதலா என்னும் பேச்சே வேண்டாம். நானா, நீயா என்று போட்டி வேண்டாம்; பிரார்த்தனை வேண்டாம்."

"பேசறதுக்கு நன்றாக இருக்கிறது. பெண்ணாப் பிறந்தவர்கள் வெளியே சொல்றதில்லை. மேடை ஏறி வயசானப் பெண்ணைப் பேசச் சொல்லுங்கோ. பெண்களுக்குப் பத்திரிகை நடத்தறவங்களை புள்ளி விவரம் எடுக்கச் சொல்லுங்கோ. 'பெண்ணாகப் பிறந்துவிட்டால் மிகப் பீழை இருக்குதடி தங்கமே தங்கம்' என்றார் பாரதி. 'மங்கையராகப் பிறப்பதற்கு மாதவம் செய்திட வேண்டுமம்மா' என்றார் கவிமணி. அப்போ கூட இரண்டு பேரும் பெண்களைப் பார்த்துத்தான் சொல்லியிருக்கிறார்கள். நிறையச் சொல்ல வேண்டும் போலிருக்கிறது. நான் சொன்னா... இவ என்ன பெரிய மேதையா என்பார்கள். உங்களுக்குத் தெரியாதா? பூதப் பாண்டியன் தேவியார் என்ற பாண்டிய அரசி! அவள் பாடியிருக்கிறப் பாட்டை நான் நூறு தடவை சொல்லியிருக்கிறேன். 'வெல்க எனச் சொல்லாது, ஒழிக என விலக்கும் பொல்லாச் சூழ்ச்சிப் பல்சான்றீரே' என்று சுற்றிலும் நின்றிருந்த புலவர்கள், மந்திரிமார்கள், அறிவாளிகளைப் பார்த்துச் சொன்ன சங்கப்பாட்டு உங்களுக்குத் தெரியுமா?" – அவள் பேசப் பேசத் திணறினாள்.

சந்திரன் அவளைச் சமாதானப்படுத்தினான்; அமைதிப்படுத்தினான். ஒரு டம்ளர் வெந்நீர் எடுத்துக் கொடுத்தான். குடிக்கச் செய்தபிறகு, அவள் மார்பை தடவிக் கொடுத்தான். புவனா, அவனைப் பார்த்து மெல்லச் சிரித்தாள்.

“எங்கே வெளியே புறப்படுகிறீர்களா?”

“ஆமாம்; இப்போதான் பார்த்தேன். சாப்பிட்டதும் சாப்பிடும் மாத்திரைத் தீர்ந்துவிட்டது. உனக்கும் மாத்திரை வாங்கிக் கொண்டு, நாளைக்குக் கறிகாய் ஏதாவது வாங்கிக் கொண்டு வந்து விடுகிறேன். நீ அமைதியாக உன் புவனேச்வரியையோ, அகிலாண்டேச்வரியையோ, அன்னபூரணியையோ பிரார்த்தனை செய்து கொண்டிரு...”

“சரி, சரி... இந்தக் கரிசனம்! தேவைப் பார்த்து வாங்கி வருவதை நான்தான் செய்து கொண்டிருந்தேன். பகவான் என்னை முடக்கி போட்டு விட்டானே!” அவள் கண்களில் கண்ணீர் துளிர்த்தது.

சந்திரன் மெல்ல, அவள் கண்ணீரை நடுங்கும் கரங்களால் துடைத்தான்.

“ஜாக்கிரதையா போங்க. அங்கே இங்கே பேசிண்டிருக்காமல் சீக்கிரம் வந்துடுங்கோ” என்றாள்.

அவளுக்கு அவள் கவலை. கணவர் உயிரைக் காப்பாற்றுவது மட்டுமன்று; ‘ஸெல்–பிஷ்’ என்று அடிக்கடி சந்திரன் கூறுகிறானே... அப்படியே இருக்கட்டுமே! சுமங்கலியாகத் தான் போவதை அவருக்கு ஏற்படும் எந்த ஆபத்தும் தடுத்துவிடுமன்றோ!

**சீ**தா சுறுசுறுப்பாய்ப் படித்தாள். நல்ல மதிப்பெண்கள் அவளுடைய அறிவாற்றலைக் கவனித்துக் கல்லூரி முதல்வர் அவளுக்கு நிறைய வாய்ப்பை அளித்தார். கனடாவிற்கு சீதாவைப் போன்ற ஆராய்ச்சிப் படிப்பில் தேறியவர்கள் தேவை. சீதாவின் பெயரைப் பலமாகச் சிபாரிசு செய்தார். சீதாவுக்குக் கனடா செல்லும் வாய்ப்புக் கிடைத்தது.

“என்ன சம்பளம் தெரியுமா?” என்று சந்திரன், புவனாவிடம் மெல்லக் கேட்டான்.

“தெரியும். நீங்கள் வெளியே சொல்லித் தம்பட்டம் அடிக்காதீர்கள். கனடாவுக்குப் போய் அங்கே கால் ஊன்றட்டும். பிறகு சொல்லலாம்”என்று கண்டிப்பாக கணவருக்குக் கட்டளையிட்டு விட்டாள்.

"நாமும் அங்கே போய்ச் செட்டில் ஆகிவிடுவோமா? சீதாவுக்குத் துணையாயிற்று. நமக்கும் நிம்மதி கிடைத்துவிடும்" என்று தன் திட்டத்தை வெளியிட்டான் சந்திரன்.

புவனா சிரித்தாள். "நமக்கு என்ன வயது தெரியுமா?"

"தெரியுமே! நான் நாள்களைக் கணக்கிட்டுக் கொண்டிருக்கிறேன்."

"எதற்கு?"

"எதற்கா? கல்லால் செதுக்கிய உடம்பா? யாராவது போய்த்தானே ஆக வேண்டும். நான் திட்டமிட்டு விட்டேன். ராமவல்லி முதியவர்கள் பாதுகாப்பு இல்லத்தில்... எவ்வளவு மாதக் கட்டணம் – என்னென்ன சௌகரியங்கள் – மருத்துவ வசதியுண்டா? என்றெல்லாம் விசாரித்து வைத்திருக்கிறேன்."

"இரண்டு பேருக்கு எவ்வளவாம்?" புவனா கேட்டாள்.

"ஒருத்தருக்குத்தான் கேட்டேன்." சந்திரன் பேச்சை வளர்க்க விரும்பவில்லை. "இதோபார். எனக்கு ஒரு கடிதம் வந்திருக்கிறது. என் நண்பன் எழுதியிருக்கிறான். செங்கல்பட்டில் அவனுக்குத் தெரிந்தவர்களிடம் பண வசதி இருக்கிறது. பிள்ளைகள் சரியாகக் கவனிக்கவில்லையாம். தனியே தானே சமைத்துச் சாப்பிட்டுக் காலம் தள்ளுகிறான். திடீரென்னு அவனுக்கு ஒரு கவலை. தனிமையான வீட்டில் தனக்கு ஏதாவது நேர்ந்துவிட்டால்...

இந்த இளஞ்சிவப்பு சிறுத்தை நெக்லஸ் 18 காரட் தங்கத்தில் 1600 வைரங்கள் பதிக்கப்பட்டு உருவாக்கப்பட்டது. விலை மூன்று கோடி ரூபாயாம்!

– க.ரவீந்திரன்



அநாதைப் பிரேதத்தை எடுத்து அதற்கு வேண்டியதைச் செய்வதற்கு ஒரு தொண்டு நிறுவனம் இருக்காம். அந்த நிறுவன முகவரியையும் கேட்டிருக்கிறான்."

"முதியோர் இல்லம்

முகவரி கொடுப்பதுதானே... சமீபத்தில் 'இலக்கியப்பீடம்' இதழில் கதை ஒன்று படித்தேன். கண்ணீர் விட வைத்து விட்டது. சரி, சாவு... முதியோர் இல்லம் இவற்றைப் பற்றி ஏன் பேச வேண்டும்? என் உடலில் சக்தி இருக்கும்வரை நான் உங்களைக் காப்பாற்றி விடுவேன். நான் சுமங்கலியாகப் போய்ச் சேர்ந்த பிறகு...” புவனாவின் குரல் தழுதழுத்தது.

“புவனா!” சந்திரன் கூவினான். “இன்னொரு தடவை இப்படிப் பேசக்கூடாது என்று எத்தனையோ தடவை சொல்லியிருக்கிறேன். மறுபடியும் நீ பேசினாலோ... வெளியே போகும் நான், அப்படியே போய் சேர்ந்துவிடுவேன். திரும்பி வர மாட்டேன். செம்பியன் மாதேவி போல் நீ வாழ வேண்டும்!” – கோபக் குரல் பிறகு தழுதழுத்தது – “சீ.. அசடே! நீ இதுபோல் சொல்வதும், நான் கத்துவதும் வழக்கமாகிவிட்டது. கண்ணீர் விடலாமா?” சந்திரன் தன் முதிய கரத்தால் அவள் விழிநீரைத் துடைத்தான்.

“ஐயோ! எப்படி இருந்த உங்கள் கரங்கள், விரல்கள்... குச்சி போலாகிவிட்டதே” என்று அவன் கரங்களைப் பிடித்து மெல்லத் தடவினாள். “சரி... சரி... காசிக்குப் போவதைப் பற்றிப் பேசினோமே. டிராவல்ஸ் வேண்டாம் என்றீர்கள். வேறு ஏற்பாடு செய்யுங்கள். சீக்கிரம் செய்யுங்கள். எனக்கு அன்னபூரணியைத் தரிசிக்க வேண்டும்போல் தோன்றுகிறது” என்றாள்.

காசிக்குப் போவதற்கு, அந்த முதிய தம்பதியர் ஆயத்தமாயினர்.

## 5

காசி நகரத்தில் வேனிற் காலத்துப் பௌர்ணமி நாள். இரவு வேளை. கங்கை நதிக்கரையை ஒட்டிய 'திரிபுரசுந்தரி காட்' எனப்படும் படித்துறையை ஒட்டிய தங்கும் விடுதி. வசதியான தங்குமிடம். அதை நிர்வகிப்பவர் கம்பீரமானவர். புரோகிதத்திற்கு புரோகிதம்; அடாவடிக்கு அடாவடி! எப்பவும் கையில் பிஸ்டல் இருக்கும். பாதுகாப்புக்காக என்று அவர் சொல்வார். விவரம் தெரிந்தவர்கள் அங்கேதான் தங்கித் தங்கள் காரியங்களைச் செய்வார்கள்.

ஜன்னல் வழியே நிலவொளி அந்த அறையை எட்டிப் பார்த்து, அந்த முதிய தம்பதியைப் பார்த்து மெல்லப் புன்னகை புரிந்து கொண்டிருந்தது.

புவனா அரைத் தூக்கத்தில் இருந்தாள். சந்திரன் அவள் அருகே



அமர்ந்து மூக்குக் கண்ணாடியைச் சரிசெய்து கொண்டு அன்னபூரணாஷ்டகத்தை மெல்லப் படித்துக் கொண்டிருந்தான்.

"நானும் நாள்தோறும் ஸ்ரீ அன்னபூர்ணா ஸ்தோத்ரம் சொல்வேன். நீங்கள் ஒரு நாள் கூட முணுமுணுத்ததில்லையே" என்று புவனா வியப்புடன் கேட்டாள்.

சந்துரு மெல்லச் சிரித்துக் கொண்டு " என் நண்பர் பாரதி காவலர், அன்னபூர்ணா துதிப்பாடல்களைத் தமிழ்ப்படுத்தியிருந்தார். ஒரு நாள்

**வி**க்டோரியா தென்கிழக்கு ஆஸ்திரேலிய மாநிலமாகும். இந்தியப் பெருங்கடலுக்கு எல்லையாக அமைந்துள்ள 200 மைல் நீள கிரேட் ஓசியன் ரோடு உலகின் மிக அழகிய சாலைகளில் ஒன்று. கடலில் காணப்படும் 12 பெரிய பாறைகளை பன்னிரண்டு அப்போஸ்தலர்கள் என அழைக்கிறார்கள்.

- க.ரவீந்திரன்

பிரதி ஒன்று கொடுத்தார். ஆதிசங்கரரின் துதிக்கு ஏற்பத் தமிழாக்கம் இருந்தது. முடிந்தபோது படிப்பேன். மனப்பாடமாகி விட்டது.

நித்யானந்தகரீவராபயகரீ
ஸௌந்தர்ய ரத்னாகரீ
நிர்தூதாகில கோரபாபநிகரீ
ப்ரத்யக்ஷ மாஹேஶ்வரீ
ப்ராலேயாசல வம்சபாவனகரீ
காசீபுராதீஶ்வரீ
பிக்ஷாம்தேஹி க்ருபாவலம்பநகரீ
மாதாந்ந பூர்ணேஶ்வரீ
சந்ததமும் ஆனந்தம் சுரந்திடுவாள்
சரணேற்று வரமளிக்கும் கரமுடையாள்
மந்தமொடு பாவவினை போக்கிடுவாள்
பனிமலையில் பரிசுத்தம் ஆக்கிடுவாள்
சிந்தனைக்கும் எட்டாத சுந்தரமாய்
சீரளிக்கும் ஈஸ்வரியாய், மந்திரமாய்
காசிபுரத்து அரசி அன்னபூரணி மாதா
கருணைகொண்டு பிக்ஷையிடு அம்மா!

அதில் 'பிக்ஷாம்தேஹி' என்னும் சொல் வரும் போதெல்லாம் புவனாவின் உடல் சிலிர்க்கும்.

"புவனா!" சந்திரன் மெல்ல அழைத்தான். "ரொம்பத் தள்ளாமையா இருக்கா?" என்று பரிவுடன் கேட்டான்.

"தள்ளாமை உங்களுக்கு இல்லாம எனக்கு மட்டுமென்ன? என்னைக் காசிக்கு அழைச்சுண்டு வரணும்னு இப்பவாவது உங்களுக்குத் தோணித்தே! அதனாலே எனக்குப் புதுத்தெம்பு பிறந்து, தள்ளாமை ஓடியே போயிட்டுது" புவனா மெல்லப் பேசினாள்.

நெற்றி நிறையக் குங்குமப் பொட்டு, மஞ்சள் பூசிய முகம், கழுத்து நிறைய சங்கிலி அணிந்திருந்தவள், காசி பக்கம் திருட்டுப் பயம் அதிகமென்று ஊரிலேயே கழற்றி வைத்து விட்டு வந்திருந்தாள். மஞ் சள் கோத்த கயறு மினுமினுத்தது. மஞ்சள் பூசிய முகத்தில் வட்ட வடிவக் குங்குமப் பொட்டுத் தெய்விகமாகத் திகழ்ந்தது. கூந்தல் தும்பைப் பூவைப் போல் காட்சியளித்தது. பாசிக்கலர் உடலும், அரக்குத் தலைப்புமாகப் பட்டுச்சுங்கடி புவனாவின் வயதுக்கேற்ற மரியாதையை அதிகப்படுத்தியது.

புவனா மெல்லச் சிரித்தாள். ஒரு காலத்தில் அவள் சிரிக்கும்போது முல்லை மொட்டுப் போல் பளிச்சிடும் பல் வரிசைகள் இப்போது எங்கே?

"நல்ல டாக்டரை எனக்குத் தெரியும். புதிய பல்செட் வைத்துக் கொள்ள எற்பாடு செய்கிறேன்" – சந்திரன் பரிவுடன் கேட்டான்.

புவனா சிரித்து, "கிருஷ்ணஜெயந்தி சீடையா, முறுக்கா சாப்பிடப் போறேன் அல்லது வெற்றிலை கடித்துப் போட்டுக்கப் போறேனா? அதெல்லாம் வேண்டாம்" என்றவள் தொடர்ந்தாள், "செத்துப் போறது ஒரு சௌபாக்யம்னா ஏன் மரணத்துக்குப் பயப்படுகிறார்கள்? சாவைத் தவிர்க்கப் போராடுகிறோம். யாராவது செத்துப் போகணும்னு வேண்டிப்பாங்களா? மத்த எல்லாரும் சொல்வது போல் நாம் பூரண வாழ்வு வாழ்ந்துட்டோம். சதாபிஷேகம் செய்யற வயசுலே அந்த நல்ல முகூர்த்ததையும் தாண்டியாச்சு. பிள்ளைகள் கவனிக்கவில்லை. கண் எதிரிலே பெண்ணைப் பறி கொடுத்தோம். நம்ம சீதாவைப் பாருங்கோ... கணவனைப் பறிகொடுத்து அவ எப்படித் திண்டாடறா? இந்த வயசுலே, நீங்க என்னை விட்டுப் போய் அமங்கலியாகி, பூவிழந்து, பொட்டிழந்து பூமிக்குப் பாரமாய் மத்தவங்களுக்கு ஓர் ஏச்சுப் பேச்சாய் இருக்கணுமா? அதனால்தான் காசி விசாலாட்சியைத் தியானம் பண்ணிண்டிருக்கேன். ஏங்க... மாசம் ஐந்நூறு ரூபாயை யார்கிட்டயாவது கொடுத்துட்டு வயித்துப் பசியை ஒரு விதமா போக்கிண்டு கங்கா ஸ்நானம் செய்துண்டு, விசுவநாதர் – அன்னபூரணியைத் தரிசனம்

காதல் வந்தபோது
வந்து கொண்டிருந்த
கவிதை...
இப்போது
கண்ணீராய்
வருகிறது!

***

சப்தமற்ற
பார்வையில்
எத்தனை ஆரவாரம்!
சபலமற்ற
நெஞ்சில்
எத்தனை நிசப்தம்!
இந்த முரண்பாடுகள்
இன்னொரு
பிரளயத்தை
உண்டாக்கிவிடுமோ!?

***

மனக் கதவை
திறப்பதற்கு
முன்பாகவே
காத்திருந்தது;
தென்றலல்ல
புயல்!
மனப் பறவை
பறப்பதற்கு
முன்பாகவே
வீசப்பட்டது
கணையல்ல
அம்பு!

***

என் கவிதை நீ
என்பதால்
காதல் வந்தால்
கவிதை வரும்
என்பதை
நம்புகிறேன்...
- தமிழ்நாயகி, சேலம்

பண்ணிண்டு... இப்படியே... இங்கேயே..."

"புவனா!" என்று அழுத்தமான குரல் கொடுத்தான் சந்திரன். ஆவேசம் அதில் மிகுந்திருந்தது.

"அறுபது வருஷமா இப்படியே சொல்லிண்டிருக்கியே? நீ போய் நான் இருக்க முடியுமாங்கறதைக் கொஞ்சமாவது நினைச்சயா? இதை 'செல்பிஷ்' என்று சொல்லறதை விட வேற என்ன சொல்றது? யார் முன்னால் போவது என்பது நம் கையிலே இல்லை புவனா! இனி அதைப் பத்திப் பேசாதே. பேசினா எனக்குக் கெட்ட கோபம் வரும். கங்கையிலே குதித்துச் செத்துடுவேன்" அவன் படபடத்ததைக் கண்டு சற்றுப் பயந்த புவனா, விழிகளை மெல்லத் துடைத்துக் கொண்டாள்.

சந்திரன் சற்று அமைதியாக "நாளைக் காலையிலே சூரியோதயத்துக்கு முந்தி படகு வந்துடும். ஹனுமான் காட், மணிகர்ணிகா காட், ஹரிச்சந்திரா காட் என்று படகிலே போய்க் கங்கையிலே ஸ்நானம் செய்து பிதூர் காரியம் செய்தாகணும்.

இதுவரை அப்பா – அம்மாவுக்கு விடாம தெவசம் செய்து வர்றேன். சிலர் சொல்வார்கள், மத்திய கைலாஸ் கோயிலில் இவ்வளவு பணம் கொடுத்து விட்டால் அவர்கள் சரியான திதியில் தெவசம் செய்து விடுவார்கள்; நாம் மறந்தாலும் அவர்கள் கடிதம் போட்டு விடுவார்கள். அந்த உத்தம கைங்கர்யத்தைச் செய்யும் அவர்களுக்குக் கோடி புண்ணியம். ஆனால், நான் விருப்பப்படலை. நீயும் உன் மாமியாருக்கும் பார்க்காத மாமனாருக்கும் மிகவும் பக்தி சிரத்தையுடன் செய்கிறாய். நமக்குச் செய்ய யார் இருக்கிறார்கள்? நமக்குத் திதி செய்ய

## கடல் எல்லை

**ஒ**வ்வொரு நாட்டிற்கும் ஒரு கடல் எல்லை நிர்ணயித்துள்ளார்கள். ஒரு நாட்டின் எல்லை என்பது அந்த நாட்டின் கடலில் இருந்து மூன்று கடல் மைல்களாகும். அதாவது 6,080 அடி தொலைவு வரை அந்த நாட்டின் எல்லை.

## பாம்பு முட்டை

**பா**ம்பு இடும் முட்டை வியப்பை ஏற்படுத்தும். ஒரு அபூர்வமான சக்தி உண்டு. அது என்னவென்றால், முட்டை இடப்பட்ட பின்னர் அம்முட்டை பெரியதாகும்.

- முக்கிமலை நஞ்சன்

வேண்டுமானால் இப்பவே பணம் கட்டி விடுவோம். நான் என்ன வேண்டிக் கொள்வேன் தெரியுமா? நாம இப்ப எல்லாத்தையும் செய்து முடிக்க காலை ஒன்பதாகி விடும். ரொம்ப களைப்பாயிடும். 'அதற்கு ஏற்ற தெம்பைக் கொடு ஈசுவரி' என்று வேண்டிக்கோ. மரணப் பேச்சு இனி வேண்டாம். 'பேச மாட்டேன்' என்று சபதம் செய்து கொடு. சுமங்கலியா போயிடுவேன் என்று வேண்டிக்க மாட்டேன்னு சபதம் செய்துடு. கயாவுக்குப் போகப் போறோம். அங்கே உறுதி மொழி எடுத்துக்கோ" என்று சந்திரன் சற்று வேகமாகப் பேசினார்.

அடுத்த சிமிழ்

பாலுசத்யா

எழுதிய

## அம்மா அம்சவேணி நாராயணி

உங்கள் உள்ளம் தொடும்
உன்னதக் குடும்ப நவீனம்

**பொ**ழுது புலரும் முன்பாகவே புவனாவும், சந்திரனும் படகில் ஏறிவிட்டனர். ஒவ்வொரு படித்துறையாகப் படகோட்டி கொண்டு நிறுத்தினான். பிண்டங்கள் கரைக்கப்பட்டன. புவனாவும், சந்திரனும் கங்கையில் நீராடினார்கள். தள்ளாத வயதில் அவர்கள் சிரத்தையாகக் 'கர்மா'க்களைச் செய்வதைக் கண்டு புரோகிதருக்கு வியப்பு.

ஐந்து ஸ்நானக் கட்டங்களிலும் கிரமமாய்ப் பித்ருகள் காரியம் செய்து முடித்துவிட்டுப் படகிலிருந்து இறங்கும்போது புவனா தள்ளாடினாள். சந்திரன் அவளைத் தன் தோள்மேல் மெல்லத் தாங்கிக் கொண்டான். ஒரு கரத்தைக் கெட்டியாகப் பிடித்துக் கொண்டான்.

"அறுபது வருஷத்துக்கு முன்பு இப்படித்தான் சிதம்பரம் குளக்கரைப் படிக்கட்டுகளில் ஒருவர் கரத்தை ஒருவர் பிடிச்சுண்டு ஏறினோம். பிறகு ஏகாந்தமா ஒருவரோடு ஒருவர் இணைந்து நடக்கறதுக்குச் சந்தர்ப்பமே கிடைக்கவில்லை" புவனா மெல்ல முணுமுணுத்தாள்.

**தி**ரிபுரசுந்தரி கட்டத்துத் தங்கும் விடுதி அறைக்குள் நுழைந்தவுடன் புவனாவுக்குத் தலையைச் சுற்றியது. சுவரைப் பிடித்துக் கொண்டாள். சந்திரன் பரபரப்புடன் பிளாஸ்கிலிருந்து

எடுத்து ஒரு வாய்க் காபியை டம்ளரில் ஊற்றிக் கொடுத்தார்.

“வேண்டாம்னா... இன்னும் கொஞ்ச நேரத்துல அன்னபூரணியைத் தரிசனம் செய்துட்டு வந்து சாப்பிடறேன். காசியிலேயே தங்கிடலாமேன்னு கேட்டேனே... அதற்குப் பதில் சொல்லலையே. இங்கேயே தங்கிக் கங்கை ஸ்நானம் செய்துண்டு சீக்கிரமா மஞ்சளும் குங்குமமுமாய் போய்ச் சேரணும்னு பிரார்த்தனையைக் கடைசியா விசாலாட்சிக்கிட்ட வேண்டிக்கணும்.”

“ஏ, புவனா!” சந்திரன் அடிவயிற்றிலிருந்து கத்தினான். “என்ன பேச்சு? சிறிது நேரத்திற்கு முன்புதான் சத்தியம் செய்து கொடுக்கச் சொன்னேன். நீ இப்படிப் பேசிண்டிருந்தா நானே போய்க் கங்கையிலே குதித்து உனக்கு முன்னமே உயிரை மாய்ச்சுண்டுடுவேன். நீ போன பிறகு எனக்குப் பூலோகத்துல என்ன வேலை? அத்துடன் என்னைப் பார்த்துக்க யாருடி இருப்பா? அதை நினைச்சுப் பார்த்தியா? வரவர சுயநலம் கொண்டு பேச ஆரம்பித்து விட்டாய். ஸ்திரி தர்மமா!” சந்திரன் விம்மினான்.

“சரின்னா, வேண்டாம். வருத்தப்படாதீங்கோ. நம்ம பிரார்த்தனையிலே என்ன இருக்கு? ஈசுவரி என்ன நினைக்கிறாளோ?”

புவனாவின் கண்களிலும் நீர் வடிந்தது. தன் கணவன் கண்ணீரைத் துடைக்கத் தன் கரங்களை நீட்டினாள். கரங்கள் நீளவில்லை. துவண்டு சரிந்தன. தலையும் சந்திரனின் பாதங்களில் சரிந்து படிந்தன.

“புவனா!” என்று சந்திரன் பலங்கொண்ட மட்டும் அலறிய ஓலம், கங்கை நதியின் சகல கட்டங்களிலும் எதிரொலித்தது.

**த**ர்மவான் கங்காதர சாஸ்திரி, புவனாவின் ஈமச்சடங்குகளுக்கு ஏற்பாடு செய்தார். அவர் என்னிடம் சொன்னார்:

“பாவம், அந்தக் கிழவர் தம் மனைவியைப் பறிகொடுத்துக் கதறுவது என் நெஞ்சையே உலுக்கிவிட்டது. இந்தக் காசியில் எவ்வளவோ பேர் தினமும் இறந்து போகிறார்கள். இந்தக் கிழத் தம்பதியின் அந்நியோன்னியம் என்னைச் சிலிர்க்க வைத்தது. நேற்று அந்த அம்மா என்னைக் கேட்டாள். ‘சுவாமி! சுமங்கலியாய் போறது புண்ணியம்தானே!” என்று. அப்படியே நடந்து விட்டது.

“அந்தக் கிழவர் இனி என்ன செய்யப் போகிறார்?” நான் கவலையுடன் கேட்டேன்.

“ஊருக்குத் தந்திக் கொடுக்கட்டுமா என்று கேட்டேன். ‘ஊரிலே யாரு இருக்கா? ஊரும் சதமல்ல; உற்றாரும் சதமல்லன்னு நாங்க வந்துட்டோம். புவனா பிடிவாதக்காரி. சுமங்கலியாய்ப் போகணும்னு பிடிவாதம் பிடிச்சா. புருஷனைத் தவிக்கவிட்டு... ஹூம்... இருந்தாலும் கடவுள் பெண்களின் கட்சி. அவள் வணங்கிய அம்பிகை ஒரு பெண்தானே!” என்று கிழவர் துக்கம் தொண்டையை அடைக்க ஈமக்கடன்களைச் செய்தார்.”

அதே படகிலே புவனாவின் சடலத்தை ஏற்றுகிறார்கள். அரிச்சந்திரா கட்டத்தில் சிதை மூட்டி எரித்துப் பிறகு கங்கையிலே அப்படியே இழுத்துவிட்டு விடுவார்கள்.

**க**ங்காதர சாஸ்திரி என்னிடம் வந்தார். “ஸார்! நீங்க சென்னைக்குத்தானே போகிறீர்கள்! இந்தக் கிழவரைப் பத்திரமாக அழைத்துக் கொண்டு போய் அவருடைய வீட்டில் ஒப்படைத்துவிடுங்கள்...” என்றார்.

‘கங்கா – காவிரி எக்ஸ்பிரஸ்’ காலையில் வாரணாசி ரயில் நிலையத்தை விட்டுப் புறப்பட்டது. கிழவர் மெல்ல நடந்து வந்தார். கம்பார்ட்மெண்டில் அவருக்குக் கீழ் இருக்கையை (பர்த்) கொடுத்தேன். வண்டி புறப்படும்போது கிழவர் குலுங்கக் குலுங்க அழுதார்.

“அவளை ஜல சமாதி ஆக்கவா காசிக்கு வந்தேன்? இனி நான் என்ன செய்யப் போகிறேன்?” என்று கூறி உரத்த குரலில் கூவி அழுதார்.

“சுமங்கலியாப் போய்ச் சேர்ந்தா... கொடுத்து வச்சவ. அவ ஜெயிச்சிட்டா” என்றாள் என் மனைவி.

திடுக்கிட்டுத் திரும்பினேன். ‘உஷ்’ என்று எச்சரிக்கை செய்தேன். கிழவர் காதில் விழப் போகிறது என்று அவரைப் பார்த்தேன்.

கண்களை மூடியவாறு படுத்திருந்தார் என்றுதான் நினைத்திருந்தேன்.

அலகாபாத் வந்தது. ஒரு கப் காபி வாங்கி அதைக் கிழவருக்குக் கொடுக்க அவரை எழுப்பினேன்.

உடல் சில்லிட்டிருந்தது.

அவரும் ஜெயித்துவிட்டார்.

**(முற்றும்)**

நகைச்சுவைக் குறுநாவல்...

# வருக... வருக... தலைவலியே வருக.....!

கௌசல்யா ரங்கநாதன்

"நாளைக்கு காலை கொஞ்சம் சீக்கிரமா கிளம்பிடணும்... முகூர்த்தம் 9-10.30 என்ற என் கணவரிடம் "ஊம் தெரியும்" என்றேன்....

"முகூர்த்தம் அட்டெண்ட் பண்ணிட்டு ஒரு வாய் சாப்பிட்டுட்டு உடனடியா புறப்பட்டாகணும்" என்று சொல்லும் என் கணவரை ஏற, இறங்க பார்ப்பேன்.

"என்ன ஜானு- உன் கவலை என்னனு எனக்கு புரியுதும்மா.. காட் ஈஸ் கிரேட்.."

"அதுக்கில்லீங்க..."

"ரிலாக்ஸ்.. ரிலாக்ஸ்... இதபாரு... இது இப்பத்திய பிளான்தான். காலை எழுந்ததும் என்ன நடக்குமோ, யாருக்கு தெரியும்? ஒவ்வொரு செகண்டும் அந்த ஆண்டவன் விதிச்சபடிதான் நடக்கும்ன்றது எனக்கும் தெரியும்மா..!"

"நீங்க சுலபமா சொல்லிட்டீங்க.. ஆனா இன்னைக்கும் என்னை எத்தனை பேர்கள்.."

"அழாதே... அழாதேம்மா... இத பாரு.. அடுத்தவங்களைப் பத்தி நாம் ஏன் கவலைப்படணும்?

நமக்கு எது சரினு தோணுதோ அதை செஞ்சுகிட்டு போக வேண்டியதுதானே..."

"எல்லாம் சரி.... ஆனா யாராவது எதையாவது சொல்றப்ப மனசு கிடந்து அடிச்சுக்குது.. அழுகை, அழுகையா வருது.. நாமும் மனிதபிறவிதானே..."

என் கணவர் இதற்குமேல் எதுவும் பேசாமல் புன்முறுவலுடன் போய் விட்டார், அங்கேயே அவர் இருந்தால் நான் மேலும், மேலும் புலம்பிக்கொண்டேயிருப்பேன் என்று.

இன்று என்னை புரிந்து கொண்டு எனக்கு ஆறுதலும் தேறுதலும் சொல்லும் என் கணவரே ஒரு கால கட்டத்தில்...!


அப்பப்பா..!
இன்று நினைத்தாலும் அழுகை, அழுகையாக வருகிறது. ஒரு பெண்ணாகிய என் மாமியாரே நான் வேண்டுமென்றே மாய்மாலம் பண்ணுவதாக எண்ணி வார்த்தைகளால் என்னை சுட்டெரித்தவர்தான்.
எங்களுக்கு திருமணமான புதிதில் நான் படும் வேதனை தாங்க மாட்டாமல் என் கணவர் சொல்வார் தன் தாயிடம்....

"டாக்டர் கிட்ட போயிட்டு வந்துடறோம்மா...."

"என்ன கலியாணம் இப்ப!.... எதுக்கு டாக்டர்!" என்பார்...

"ஜானுவுக்கு தலை வலிக்குதாம்..."

"தலை வலிக்கு டாக்டரா.. ரொம்ப நல்லாதான் இருக்கு போ.."

"என்னம்மா சொல்ல வரே?"

"ஏண்டா.. தலைவலிக்கெல்லாம் டாக்டராண்ட போவாங்களா என்ன? உன்னைப்பார்த்தா எனக்கு சிரிப்புத்தாண்டா வருது"

"அம்மா இது சாதாரண தலைவலி இல்லைம்மா.."

"தலைவலில என்னடா சாதா தலைவலி, ஸ்பெஷல் தலைவலினு.. சாதா தோசை.. ஸ்பெஷல் தோசைன்றாப்பல....."

"அம்மா அவ கிடந்து துடிக்கிறா.."

"டேய் எல்லாம் மாய்மாலம்டா.... தலைவலியும் ஜுரமும் எல்லாருக்கும் வரது தானேடா.. இதுக்கே அப்படினா நாளைக்கு பிரசவ வலிவந்து... ஏண்டா.. நாங்கள்ளாம் அனுபவிக்காத வலியா, வேதனையா. அப்பல்லாம் – அப்பல்லாம் இவ்வளவு டாக்டர்களும் கிடையாது.... தொட்டதுக்கெல்லாம் டாக்டர்கள் கிட்ட எங்களை அழைச்சுகிட்டும் போகமாட்டாங்கடா."

இன்னொரு சமயம் இதே போல் வலி வந்து துடிக்கும் போது மாமியார் சொல்வாள் தன் பிள்ளையிடம்–

"ஏண்டா பத்தியமா இருக்கணும்ல... பிள்ளை பெத்த பச்சை உடம்புக்காரி.. ஊம் இதுக்கு மேல நான் என்னத்த சொல்றது?"

நான் அப்போதெல்லாம் என் மாமியாரிடம் மெதுவாய் சொல்வேன்

"அம்மா நான் பத்தியமாய்த்தான்மா இருக்கேன்– வாயை, வயிற்றை கட்டிகிட்டு.."

"என்ன கண்ட்ராவியோ, யாருக்கு தெரியும்?" என்பார் நிஷ்டூரமாக..

என் கணவரும் என்னை ஒரு மாதிரியாய் பார்ப்பார்.

"என்ன ஜானு.. அம்மா என்ன என்னவோ சொல்றாங்களே?"

"இல்லீங்க.. நான் நிசமாலுமே பத்தியமாதான் இருக்கேன்."

எனக்கு ஐஸ்கிரீம், கூல் டிரிங்ஸ் வகையறாக்கள் எல்லாம் ரொம்ப பிடிக்கும்.

ஆனால் இதெல்லாமே திருமணத்துக்கு முன்னால தான்... உணவில் எண்ணை அதிகம் பயன் படுத்துவேன்... இது கூட என் திருமணத்துக்கு முன்பு வரை தான். கல்லூரியில் படிக்கும் போது இஷ்டத்துக்கும் வெளுத்து

வாங்குவேன். நண்பிகளுடன் சேர்ந்து காலேஜ் காண்டின், ஹோட்டல் என்றெல்லாம் போய்..

ஆனால் இன்று நிலைமை தலைகீழ்! போடா.. ஏன் பேந்த பேந்த ஆடு திருடின கள்ளனாட்டம் விழிச்சுகிட்டு நிற்கிறே.... சமையல் கட்டில் பழைய கிளாக்ஸோ டப்பால சுக்கு வச்சிருக்கேன். ஆமாம் சுக்கு தெரியுமோ உனக்கு?"

"என்னம்மா இப்படி கேட்டுட்டே... சுக்கு தெரியாதா எனக்கு? இஞ்சி காஞ்சா சுக்கு.."

"பரவாயில்லையே... போய் அந்த சுக்கை எடுத்து அம்மில கொஞ்சமா தண்ணிவிட்டு சுக்கை இழைச்சியானா சந்தனம் போல வரும்டா... அதை எடுத்து அவ நெத்தியில் போடச்சொல்லுடா.... எப்படிப்பட்ட தலைவலியும் பஞ்சா பறந்து போயிடும்டா.."

"அம்மா சுக்கு எப்படி?" என்று என் கணவர் கேட்டார்.

"போடா பைத்தாரா... (பைத்தியக்காரா)... சுக்குக்கு மிஞ்சின மருந்தும் இல்லை.. சுப்பிரமணிய சாமிக்கு மிஞ்சின தெய்வமுமில்லைம்பா..."

"பழமொழி எல்லாம் நல்லாதான் சொல்றேம்மா.."

"பின்ன.. நம்ம தஞ்சாவூர் பக்கம் இது போல பழமொழி எல்லாம் சர்வசாதாரணம்டா கண்ணா – போ... போ... பேந்த பேந்த விழிச்சுகிட்டு நிற்காதே... சாதாரண தலைவலிக்கு டாக்டர் கிட்ட போறானாம்.. அவன் 50/100 பிடுங்குவான். கலர்கலரா 100 ரூபாய்க்கு மாத்திரை எழுதித்தருவான்.."

"அம்மா நாம் ஒண்ணும் கையை விட்டு கொடுக்கப்போறதில்லை.. அவ ஆபிசில் திரும்பிக் கொடுத்துடுவாளாம் வைத்திய செலவை எல்லாம்..."

"அதுக்காக தலைவலிக்கெல்லாம் டாக்டர் கிட்ட போகணுமாக்கும். பீத்திக்க பெண்டாட்டியை பத்தி..."

என் கணவர் பாடுதான் திண்டாட்டமாய் போய்விடும்.. தன் தாயை மீறி அவரால் என்ன செய்துவிட முடியும்?

"பரவாயில்லை விடுங்க.. அம்மா சொன்னாப்பல சுக்கை எடுத்து அம்மில தண்ணிவிட்டு பட்டுப்போல நைஸா இழைச்சுக்கொண்டுகிட்டு வாங்க.."

ஆனால் அதற்கும் டெப்பே காட்டும் என் தலைவலி "ஐயோ.. ஐயோ தாங்க முடியலைங்க.." என்று அழுவேன்... துடிப்பேன்..

அன்று இரவு பூரா சிவராத்திரிதான்...

"இரு.. இரு இதோ வந்துடறேன்" என்று எங்கோ கிளம்புவார் அந்த இரவு 11 மணி வேளையில்.

"வேணாங்க.. அம்மா.."

"என்ன அம்மா.. இரு..." என்று சொல்லி அந்த இரவில் எங்கேயோ சுற்றியலைந்து ஒரு பாட்டில் யூகலிப்டஸ் ஆயில் வாங்கி வந்து என் நெற்றியில் இட்டு சூடு பறக்க தேய்த்துவிடுவார்..... இதை மோப்பம் பிடித்து மாமியார் கேட்பார். "என்ன நீலகிரி தைல வாடை..? (யூகலிப்டஸ் ஆயிலுக்கு அப்போதெல்லாம் நீலகிரி தைலம் என்று பெயர்) அம்மனுக்கு தைல சாத்துமுறை நடக்குதாக்கும்..." என்பார்.

"அம்மா..."

"இருடா... பெண்டாட்டிக்கு லேசா தலைவலின உடனே ஓடிப்போய் காசைக்கரியாக்கிட்டு... இந்த கரிசனம் பெத்தவ மேலயும், உடன் பிறப்பு மேலயும் காணோமே... ஏண்டா?"

"அம்மா என்னம்மா நீ... உனக்கு என்ன செய்யலைம்மா நான்... தங்கை ரமாவுக்கு என்ன செய்யலை...? உங்களுக்கெல்லாம் என்ன குறைவச்சேன்?"

"சரி... சரி... செஞ்சதை, ஒண்ணும் சொல்லிக்காட்ட வேணாம்டா கண்ணா.. பெத்தவங்களுக்கும், உடன் பிறப்புக்கும் செய்யவேண்டியது உன் கடமைடா.."

இருக்கும் தலைவலி போதாதென்று மாமியாரின் இத்தகைய பேச்சால் இன்னும் தலைவலி அதிகமாகி தலையை அழுந்தப்பிடித்துக்கொண்டு ஒரு காசி சுரிழை சிவப்பு துண்டால் தலையை அழுத்தமாய் கட்டிக்கொண்டு படுத்திருப்பேன்..."

"அப்போதும் கூட மாமியார் பரிவட்ட மரியாதை எல்லாம் நடக்குதாக்கும்" என்பார் என்வேதனை புரியாமல்...

அப்போதெல்லாம் யூகலிப்டஸ் ஆயிலை தவிர வேறு தலைவலி மருந்து கிடையாது.

'ஒரே ஸாரிடான்.. தலைவலி பறந்து விடும்' என்பது போன்ற விளம்பரம் கிடையாது...

பிறகு காலக்கிரமத்தில்தான் அமிர்தாஞ்சன் போன்ற சகல விதமான பெயின் கில்லர்களும் அறிமுகமாயின...

ஆனாலும் என்தலைவலி எல்லாவற்றிற்கும் பெப்பே காட்டியது..

நாளொரு மேனியும், பொழுதொரு வண்ணமுமாய் கன ஜோராக

என்னை மையம் கொண்டது தலைவலி.

வானிலை அறிவிப்பாளர்கள் சொல்வார்களே... டிப்ரஷன் பார்ம் ஆகியுள்ளது.. அது சென்னையை மையம் கொண்டுள்ளது என்றெல்லாம்.. அப்படி சில சமயங்களில் என்னை ஆட் கொண்டு ஆட்டிபடைத்திடும் திருவாளர் தலைவலியார் மெள்ள, மெள்ளத்தான் என்னை விட்டகலும். முதலில் அரை நாள். பிறகு ஒரு நாள் என்றிருந்த தலைவலி சமயங்களில் இரண்டு, மூன்று நாட்கள் கூட என்னை தொடர்ந்து வாட்டி வதைத்திட ஆரம்பித்தது.

சில தமிழ் சினிமாக்களில் கதாநாயகன் அல்லது கதாநாயகியின் பலவீனம் அறிந்த வில்லன் அவர்களை அவ்வப்போது சற்றும் எதிர்பாராத தருணங்களில் வந்து பிளாக்மெயில் செய்து பெரும் தொகையை வாங்கிக்கொண்டு போவார்களே.... பிறகும் அட் பீரியாடிக் இன்டர்வெல்ஸ் வந்து மிரட்டி, மிரட்டி பணம் கறப்பார்களே அப்படித்தான் என்னையும் திருவாளர் தலைவலியார் தன் வீரியத்தை அதிகப்படுத்திக்கொண்டேயிருந்தது.

இனி பொறுப்பதில்லை என்ற முடிவுக்கு தள்ளப்பட்ட நான் கணவன், மாமியார் கைகளை நாடக்கூடாதென எண்ணி டாக்டரிடம் போனேன்.

அவரும் பல வித டெஸ்டுகள் எடுத்து கடைசியாக சொன்னார்:

“பயப்படறாப்பல எதுவுமில்லை மாடம். உங்களுக்கு டென்ஷன்.. அதான் தலைவலி வருது. ஓக்கேவா?”

“டென்ஷனா.. இன்னைக்கு டென்ஷன் இல்லாதவங்க யாரு டாக்டர்?’

“இத பாருங்க மாடம்.. குறுக்கே கேள்விகள் கேட்கக் கூடாது.. நீங்க வேலைக்குப்போற ஒர்கிங் ஒமன்... வீட்டை, ஐ மின் உங்க கணவரை, மாமியாரை குழந்தைகளை கவனிச்சு முடிச்சிட்டு அரக்க, பறக்க ஆபீஸ் போயாகணும் நீங்க ஈஸின்டிட்”

“ஆமாம்”

“பார்த்தீங்களா. இது... இதுதான் டென்ஷனுக்கான காரணம்.. அதனால்தான் தலைவலி..”

“என்ன செய்யலாம்?”

“என்ன செய்யலாமா? அதான் எங்கிட்ட வந்துட்டீங்கள்ள? இனிமே கவலையை விடுங்க.. இந்த சுண்டக்காய் தலைவலிக்கெல்லாம் பயப்படுவாங்களா என்ன?”

“அதுக்கில்லை டாக்டர்...”

"இருங்க... இத பாருங்க... நீங்க ரிலாக்ஸ்டாயிருக்கணும். வானமே இடிஞ்சு தலைல விழுந்தாலும்... என்ன சரியா? பதற்றம் தான் தலைவலிக்கு காரணம்.. இப்பத்திக்கு ஐஸ்பிரிஸ்கிரைப் ஸம் மெடிசின்ஸ் - தவறாம சாப்பிட்டுட்டு வாங்க... பார்ப்போம்" அதன் பிறகு பல முறைகள் அவர் சொன்னபோதெல்லாம் போய் என்னை வைத்து அவர் தலைவலிகளில் எத்தனை வகைகள் உண்டு.... எப்போதெல்லாம் வரும்.... என்று ஆராய்ச்சி செய்து முனைவர் பட்டமே வாங்குமளவுக்கு என் தலைவலி உதவியது அவருக்கு.

எத்தனை எத்தனை மாத்திரைகள். காப்சூல்கள்.. வண்ண வண்ணமாய்... காலையில் காபி சாப்பிடும் முன், காலை டிபனுக்கு பின்.... மதிய உணவுக்கு முன்னும், பின்னும்.... இரவு உணவுக்கு முன்பும், பின்பும் - இரவு படுக்கப்போகும் போது மட்டுமே என்றெல்லாம் நேரம் தவறாமல் சாப்பிட்டு.... ஊஹூம் எதுவும் பலனில்லை.

எப்போதும் போல அட் பீரியாடிக் இன்டர்வெல்ஸ் எனக்கு முன் அறிவிப்பு இல்லாமலே தலைவலி என் சாம்ராஜ்ஜியத்தில் கொடிகட்டி பறக்க ஆரம்பித்தது.. என்னை கிடுகிடுக்க வைத்தது... பிறகு பலப்பல டாக்டர்கள் பார்த்தாயிற்று...

ஒரு டாக்டர் சொன்னதை இன்னொரு டாக்டர் கூடாதென்றார்.

மற்றுமொரு டாக்டர் இவைகள் எதுவுமே சரியில்லை என்பார்..

மறுபடி பல வித டெஸ்டுகள்... எக்ஸ்ரே.... ஸ்கான், மல, மூத்திர, ரத்த, எண்டாஸ் கோபி... ஈ.சி.ஜி என்றெல்லாம் எடுக்க பணிப்பார்.

"இது எல்லாமே இப்பத்தானே எடுத்தேன் டாக்டர்"

"எங்கே எடுத்தீங்க" என்றால் சொல்வேன் லாப் பெயரை...

"அதானே பார்த்தேன்- அவங்கிட்ட லேட்டஸ்ட் எக்யுப்மெண்ட், குவாலிபைட் டெக்னிஷியன்ஸ்னு எதுவுமே இல்லை.. எக்யுப்மெண்ட்ஸ் காலிபரேஷன் பண்ணணும்யா அடிக்கடி... ஸோ யு பெட்டர் கோடுத லாப் விச்ஐ ஹாட் ஸஜஸ்டட்.... துல்லியமாயிருக்கும் டெஸ்ட் ரிஸல்ட்ஸ்..."

பிறகு ஏகப்பட்ட பீஸ் பெற்றுக்கொண்டு மறுபடி கலர் கலராக மாத்திரைகள், காப்சூல்கள் என்று 500/600க்கு அதுவும் அவர் வைத்துள்ள பார்மஸியில் தான் மெடிசின்ஸ் வாங்க வேண்டும் என்று பணித்து அதற்கும் பணம் பிடுங்கிக்கொள்வார்... இதற்கு பிறகு நான் அவரிடம் "டாக்டர் என் தலை வலி சரியாயிடுமா" என்றால் "சரி பண்றதுக்குத்தானே நாங்க இருக்கோம்... நம்பிக்கையை கை விடாதீங்க," என்பார்.

ஸ்பெஷலிஸ்டுகளையும் கன்ஸல்ட் பண்ணியாயிற்று... எத்தனை,

எத்தனை எக்ஸ்ரேக்கள்... ஸ்கான்கள்... மற்றும் பலபல பரிசோதனைகள் தேவையிருக்கிறதோ இல்லையோ அவர்கள் பரிந்துரைத்த லாபரடிரிகளில்... ஊம். யார், யாருக்கெல்லாம் முற்பிறவிகளில் கடன் பட்டிருக்கிறோனோ, ஆண்டவா....

பணம் போனால் போகட்டும்... என் உடல் உபாதை சரியானால் போதும் என்ற நிலைக்கு தள்ளப்பட்டேன்..

காற்றிலேறி விண்ணையும் சாடுவோம் என்றான் மகா கவி அன்று...

இன்று நிசமாலுமே விண்வெளியில் ஏகப்பட்ட சாடிலைட்டுகள்... வீரம் மிக்க கல்பனா சாவ்லா போன்றவர்கள்...

சந்திரனில் பிளாட் போட்டு விற்கப்போவதாகவும் அமெரிக்கர்கள் முண்டியடித்து போட்டி போட்டுக் கொண்டு முன் பதிவு செய்வதாகவும் கூட சில நாட்கள் முன்செய்தி வந்திருக்கிறது....

ஓப்பர் ஹார்ட் சர்ஜரி எல்லாம் போய் கத்தி வைக்காமல், வலியில்லாமல் காமிரா காப்சூல் என்றதொரு சிகிச்சை பற்றி சன் டிவியில் சில மாதங்களுக்கு முன்பொரு செய்தி...

அதாவது என்ன வியாதி என்று கண்டறிய வேண்டி டாக்டர்கள் காமிரா பொருத்தப்பட்ட காப் சூலை நோயாளிக்கு கொடுத்து விடுவார்களாம்...

நோய் வாய் பட்ட நோயாளியும் அந்த காப்சூலை உட்கொண்ட பின் சகஜமாக எந்த வேலையையும் செய்யலாமாம்..

எங்கு வேண்டுமானாலும் போகலாமாம்...

அவன் உட்கொண்ட காப்சூலில் பொருத்தப்பட்ட மைக்ரோ காமிரா அவன் உடல் முழுவதும் பயணம் செய்து மருத்துவரின் அறையில் உள்ள தொடு திரையில் என்ன கோளாறு.... எங்கே என்பதை துல்லியமாய் படம் பிடித்து காட்டுமாம்... அதன் பிறகு அதற்கான சிகிச்சையை மேற்கொள்வார்களாம்...

மருத்துவ விஞ்ஞானம் இன்று எப்படியொரு அற்புத வளர்ச்சியை கண்டிருக்கிறது பாரதத்தில்

அன்று இந்தியாவில் சிகிச்சை கொடுக்க முடியா விட்டால் வெளிநாடு போவார்கள் உயர் ரக சிகிச்சைக்கு.... ஆனால் இன்று உலகம் பூராவிலிருந்தும் துல்லியமான செலவு குறைந்த சிகிச்சை பெற்றிட பாரதம் வருகின்றனர் என்பதே பெருமைக்குரிய விஷயம்...

அடுத்து வியாழன் கோளை நோக்கி பயணப்படப் போவதாக செய்தி வருகிறது..

ஒரு பக்கம் சென்னையில் அதி நவீன மருத்துவ மையங்கள்... உயர்தரமான சிகிச்சைகள்.. ஆனாலும் என் தலைவலிக்கான மருந்து இன்னும் கண்டு பிடிக்கப்படவில்லையோ...

“டேய் யாரங்கே... நாட்டின் மகாராணிக்கு தீர்க்க முடியாத தலை வலி...



கானா ஒரு மேற்கு ஆப்பிரிக்க நாடு. கேப் கோஸ்ட் கானாவில் உள்ளது. இங்குள்ள புராதன எல்மினா கோட்டையின் மேற்புறத் தோற்றத்தைத்தான் படத்தில் பார்க்கிறீர்கள்.

- க.ரவீந்திரன்

அன்னாரது தலைவலியை போக்குபவர்களுக்கு தக்க சன்மானம் வழங்கப்படுவதுடன், அரண்மனை வைத்தியர் என்ற அந்தஸ்தும் வழங்கப்படும்..” என்று பழங்காலமாய் இருந்தால் முரசு கொட்டி முழக்கம் செய்யலாம்...

“என்ன.. மாடம் தலை வலியாக்கும்” என்பார் என் கணவர் நான் சோர்வாய் இருக்கையில்...

“ஊம்..” அழுவேன்..

“அழாதே.... அழாதேம்மா... எல்லாம் பிராரப்த கர்மா..”

"பிராரப்த கர்மானா?"

"முன் வினைப் பயன்... அதாவது முற்பிறவிகளில் செய்த பாவம்... அதன் பலன்" என்பார்....

சிரித்து வைப்பேன்... வேறு என்ன செய்ய?

எய்ட்ஸுக்குக் கூட மருந்து கண்டுபிடித்து விடுவார்கள் காலப்போக்கில் விஞ்ஞான வளர்ச்சியின் காரணமாய்..

ஆனால் என் தலைவலிக்கு காலையில் அமைதியாய், சிரித்த முகத்துடன் அலுவலகம் போகும் எனக்கு மதியம் தலைவலி வந்து விடும்.

காலையில் என் அதிகாரி என்னிடம் சொல்லியிருப்பார். "மாடம்.. ஞாபக மிருக்குல்ல. டுடே ஆப்டர் நூன் போர்ட் ஆப் கவர்னர்ஸ் மீட்டிங் இருக்குனு... பாயின்ட்ஸ் பார் டிஸ்கஷன் பிரிபேர் பண்ணிட்டீங்கதானே.. பண்ணியிருப்பீங்க.. உங்களுக்கு ரிமைண்ட் பண்ண வேண்டியதில்லை நீங்களும் கலந்துக்கணும்... மெம்பர்ஸ் ஏதாவது கொர்ரி ரெய்ஸ் பண்ணினா விளக்க வேண்டியிருக்கும்... ஓக்கே" என்பார்.....

ஆனால் சொல்லிவைத்தாற்போல் மதியம் ஒரு மணியிலிருந்தே தலையை பிளக்க ஆரம்பித்துவிடும்....

சகித்துக் கொண்டு மீட்டிங் போவேன்... கவனம் செலுத்த முடியாமல் தவியாய் தவிப்பேன்.... வாந்தி வருவது போல இருக்கும்..

நெளிந்து கொண்டிருப்பேன்...

"மாடம் டு யூ பீல் அன்கம்பர்டபிள்" என்பார் என் மேலதிகாரி என்னை பற்றி அறிந்தவர்.

"நோ....நோ...." என்பேன்

மீட்டிங் முடிந்து வந்ததும் என்மேலதிகாரி சொல்வார்...

"வீட்டுக்கு போங்க மாடம்... ஆட்டோ கொண்டுவரச் சொல்லட்டுமா" என்பார்..

வீடு வந்து சேர்ந்ததும் துணி எடுத்து அழுந்த தலையில் கட்டிக்கொண்டு அப்படியே டாபிளட்.... அதி வீரியமானது (அதன் பெயரை இங்கு குறிப்பிட நான் விரும்ப வில்லை வாசகரே.. ஏனெனில் இப்படியொரு தலைவலி இருக்கும் ஒருவர் அந்த மாத்திரையை தன்னிச்சையாய் கடையில் வாங்கி உட்கொண்டு விட வாய்ப்பிருக்கிறது என்பதால்) போட்டுக்கொண்டு படுத்து விடுவேன்..

எப்படி பிளாக் மெயில் செய்யப்படும் நபர் நடுங்கி சாவாரோ அப்படித்தான் நானும் இந்த தலைவலி என்ற மாயப்பிசாசினை அஞ்சி

குலைநடுங்கிப்போனதுண்டு..

இது மட்டுமா?

வீட்டுக்கு யாராவது முக்கிய விருந்தினர்கள் வருகை புரிந்திருப்பார்கள்...

அப்போது பார்த்து இடம், பொருள், ஏவல் தெரியாமல் திருவாளர் தலைவலியார் என்னை ஆக்கிரமித்துக் கொள்வார்..

வந்திருக்கும் விருந்தினர்கள் தங்களது வருகையை நான் விரும்பவில்லை என்று எண்ணிக் குமைவதுண்டு..

என் கணவரிடமோ, மாமியாரிடமோ இது பற்றி கேட்காமல் ஊரில் உள்ள மற்ற உறவினர் வட்டத்தில் என்னை பற்றி வசை மாரி பொழிவதும் உண்டு....

வீட்டில் சமையலுக்கு ஒரு ஆள்... துவைத்த துணியை எடுத்து உலர்த்தி, மடித்து வைக்க ஒரு ஆள் என்றெல்லாம் நிறைய பேர்கள் இருக்கிறார்கள்தான்...

குழந்தைகளும் வளர்ந்து பெரியவர்களாகி விட்டபடியால் அவர்கள் வேலையை அவர்களே செய்து கொண்டு விடுகின்றனர் என்பதால் எனக்கு டென்ஷன் இல்லைதான்.

இப்போதெல்லாம் என் மாமியார் கூட என்நிலை உணர்ந்து என்னிடம் எதுவும் கேட்பதில்லை.

அலுவலகத்திலும் என் வேலைப் பளுவை வெகுவாய் குறைத்து விட்டார்கள். ஜஸ்ட் சூபர் வைசிங் மட்டுமே... அது கூட லைட்சீட்தான்...

ஆனாலும் ஒரு பாட்டு வருமே "ஞானஒளி" என்ற படத்தில்..

ஆயிரம் இருந்தும் வசதிகள் இருந்தும் நோ பீஸாப் மைண்ட் என்று...

அப்படி என் தலைவலி என்னவோ என்னை விட்டு போகமாட்டேன் என்று அடம் பிடிக்கிறது...

கிராமத்திலிருந்து வந்திருந்த என் மாமியாரின் அக்கா சொன்னார்...

"ஒரு முறை கிராமத்துக்கு கூட்டிண்டு வா உன் நாட்டு பெண்ணை.. மந்திரிச்சு பார்க்கலாம்... கழுப்பு கழிச்சா சரியாயிடும்.. மந்திரிச்சு தாயத்து கட்டினா எல்லா தோஷமும் சரியாயிடும் பாரேன்" என்று....

எனக்கு சிரிப்புத்தான் வந்தது.. அவர்களை குற்றம் சொல்லவும் முடியாது. நானும் எதை தின்றால் பித்தம் தெளியும் என்ற நிலைக்கு தள்ளப்பட்டிருந்தேன்..

கிராமத்து நாட்டு வைத்தியர் சொன்னார் என்னிடம்..

“பூ... இதுக்குப்போயா இவ்வளவு துட்டு செலவழிச்சீங்கம்மா.. நான் கொடுக்கிற சூரணம், லேகியம் எல்லாம் சாப்பிடுங்க... தலைவலி பஞ்சா பறந்திடும்” என்று..

ஊஹூம்... எதற்கும் பெப்பே காட்டியது என் தலைவலி...

நானும் இன்று புதிதாக பிராக்டிஸ் தொடங்கும் டாக்டரிலிருந்து ஊர் பூரா உள்ள அத்தனை டாக்டர்களையும் பார்த்தாயிற்று..

நான் சந்தித்த டாக்டர்கள்.... வைத்திய முறைகள்.. உட்கொண்ட மருந்துகள் என்ற தலைப்பில் தீசிஸ் தயாரித்து முனைவர் பட்டமே வாங்குமளவுக்கு என்னிடம் விஷயம் இருக்கிறது. இது மட்டுமா? அல்லோபதி தவிர ஹோமியோபதி, யூனானி, சித்தா, ஆயுர்வேதம் என்று எல்லா வைத்திய முறைகளையும் பார்த்தாயிற்று... அக்கு பங்க்சர் பார்த்தாயிற்று...

“எண்ணெய் பதார்த்தங்களை அடியோடு ஒதுக்க வேண்டும்” என்றார்கள்.. ஒதுக்கியாயிற்று...

பருப்பு, உப்பு சேர்க்கக் கூடாதென்றார்... விட்டாயிற்று கேரளா போய் அவர்கள் வைத்தியம் செய்து கொண்டேன்..

“சைக்யாட்ரிஸ்ட் பாருங்க” என்றார் ஒரு டாக்டர்.

“வாட்? சைக்யாட்ரிஸ்ட்?”

“சைக்யாட்ரிஸ்ட்னா ஏன் பயப்படறீங்க.. உங்களுக்கே தெரியாமல் ஏதோ ஒரு மனக்குறை உங்க ஆழ் மனசில் இருக்கலாம். அது என்னனு கண்டு பிடிச்சு சிகிச்சை கொடுத்துட்டா எல்லாம் சரியாயிடும்..”

ஒரு சைக்யாட்ரிஸ்ட்.. இரண்டு சைக்யாட்ரிஸ்ட் பார்த்தாயிற்று...

“சைகிகல் பிராப்ளம் எதுவுமில்லை மாடம்... பெட்டர் கன்ஸல்ட் எ வெரிகுட் டாக்டர்” என்றனர்..

“பிரானிக் ஹீலிங் பத்தி தெரியுமா மாடம்” என்றபோது

“பிராணிகளை வதைக்கிறது தப்புனு தெரியும்...”

“நோ மாடம்... ஆர் யூ ஜோக்கிங்... பிரானிக் ஹீலிங்ன்றது ஒரு வகை மருந்துவ முறை...”

“சொல்லுங்க இப்ப நான் என்ன பண்ணனும்?”

“ஒண்ணும் பெரிசா செய்ய வேண்டாம்.. சாப்பாடே சாப்பிடக்கூடாது நீங்க...”

“பின்ன?”

“பயப்படாதீங்க... எங்க பிரானிக் ஹீலிங் முறைல எல்லாம் இயற்கை வைத்தியம் தான்..

உணவே மருந்து... மருந்தே உணவுனு கேள்விபட்டிருக்கீங்களா.. என்ன பண்றீங்கனா... காலைல காபி, டீ எதுவும் குடிக்கக்கூடாது.. அருகம் புல் ஜூஸ் ஒரு டம்ளர்..

அப்புறம் கொத்த மல்லி, இஞ்சி, புதினா, எலுமிச்சை சேர்த்த ஜூஸ்.

மதியத்துக்கு பிரஷ்ஷா வாங்கிக்கிட்டு வந்தகாய்கறிகளை நல்லா கழுவி, துண்டு துண்டா வெட்டி காலை 11 மணிக்கும், மதியம் 1 மணிக்கும் கொஞ்சமா சாப்பிடணும்... காபி, டீ மட்டுமில்லை, பால் அறவே கூடாது.. மத்த பானங்களுக்கும் தடா.... அரிசி, கோதுமை, கேழ்வரகு, பருப்பு வகைகள், எண்ணெய், நெய், உப்பு, புளி, காரம் எதுவும் கூடாது..”

“இப்படி எத்தனை நாட்களுக்கு டாக்டர்?”

“எத்தனை நாட்களுக்கா... அதெப்படி எக்ஸாட்டா சொல்ல முடியும். உடம்பு குணமாற வரைக்கும்.... அதாவது சிக்ஸ் மண்த்ஸ் ஆர் ஒன் இயர்கூட ஆகலாம்”

இவைகளை சாப்பிட்டு எழுந்திருக்கக்கூட திராணி இல்லாமல் போயிற்று.. எலும்புக் கூடாகிப் போனேன்..

மயக்கம் வந்து காதுகளை அடைத்தது... கண்கள் இருட்டிக்கொண்டு வந்தது..

கீழேவிழப்போன என்னை தாங்கி பிடித்துக்கொண்டார் என் கணவர்..

இதைப்பார்த்துவிட்ட என் மாமியார் “என்ன கருமாந்திரம் இது.. நான் தள்ளி போனப்பவே நினைச்சேன். இத்தனை வயசில் மறுபடி இது தேவையா?” என்ற போது என் கணவருக்கே பற்றிக்கொண்டுவர, தன் தாயைப்பார்த்து “அம்மா உன் திருவாயை மூடிக்கிறியா சித்த நேரம்.. சமயா சமயம் தெரியாம என்ன என்னவோ பேசிக்கிட்டு, வியவஸ்தையில்லாம” என்றார்..

எனக்கு அழுகை அழுகையாய் வந்தது.

முன்பொரு முறை ஒரு பௌராணிகர் சொன்ன கதை இப்போது என் நினைவுக்கு வந்தது..

ஒரு முனிவர் தன்னை நாடி வருபவர்களின் குறை, நோய் எல்லாம் தன் தவ வலிமையால் குணமாக்குவாராம்.. ஆனால் அவருக்கே தீராத வயிற்று வலி இருந்ததாம்.

முனிவரின் சீடர் கேட்டாராம் அவரிடம் “ஏன் ஸ்வாமி.. எல்லாரது வியாதிகளையும் குணமாக்கற தாங்கள் ஏன் உங்க தவ வலிமையால் உங்க வயிற்று வலியை போக்க முடியாதா?” என்று...

“முடியும் சீடனே, ஆனால் இது என் முன் வினைப் பயன்... இதை

இந்த பிறவியில் நான் அனுபவித்தே தீரவேண்டும்.. இப்போது என் தவ வலிமையால் இதை நிறுத்தினாலும் வரப் போகும் பிறவிகளில் இது தொடரும் - அதனால் இந்த பிறவியிலேயே இந்த வேதனையை அனுபவித்து விடலாம் என்றிருக்கிறேன்" என்றாராம்..

அப்படி இந்த தலை வலியும் என் முன்வினைப் பயனோ.. கடவுளே.. இப்படியொரு வலியை, வேதனையை நான் அனுபவிக்க வேண்டுமென்பது உன் சித்தமெனில் அதையும் மகிழ்ச்சியாக ஏற்றுக்கொள்ள தயாராய் இருக்கிறேன்.

"விஷயம் தெரியுமோ உனக்கு" என்கிறாள் என் தோழி ஒருத்தி... பல வருடங்கள் கழித்து இப்போதுதான் அவளைப் பார்க்கிறேன்...

"என்ன சொல்லு..."

"பீரியட் நின்று போயிட்டா இந்த தலைவலியெல்லாம் போயிருமாம்..."

"எனக்கு எப்பவோ நின்னு போயாச்சு... இட்ஸ்கான்... போயே போயிந்தி.." என்கிறேன் வேதனை கலந்த சிரிப்புடன்...

இப்படியாக என் சாம்ராஜ்ஜியம்தனில் பட்டா இல்லாமல் திருவாளர் தலைவலியார் செங்கோல் செலுத்தி வந்தார் தனிக்காட்டு ராஜாவாக...

"மாடம் நான் ஒரு வைத்தியம் சொல்றேன் உங்கதலைவலிக்கு" என் பார்கள் என்னைப் பார்ப்பவர்கள்.

"சொல்லுங்க... எதைத்தின்னா பித்தம் தெளியும்ன்ற நிலைமைல இருக்கேனாக்கும் நான்...."

இப்படியாக யார் எந்த ஆலோசனைகள் சொன்னாலும் தவறாது செய்வதை வாடிக்கையாக்கிக் கொண்டேன்...

"தலைவலி போக்க 108 வழிகள்" என்ற தலைப்பில் ஒரு புத்தகமே போடுமளவுக்கு என்னிடம் விஷய ஞானம் உள்ளது.

ஏதாவது வார, மாத இதழ் என்னிடம் இது பற்றி கேட்டால் தொடராகக்கூட என் அனுபவம், வேதனையை பகிர்ந்து கொள்ளவும் முடியும்.

மறுபடி இப்போது எனக்கு தலைவலி வரும் அறி குறி தென்பட, உனக்காச்சு, எனக்காச்சு... பார்த்துடலாம் ஒரு கை என்று அறைகூவல் விடவும் சித்தமாகி விட்டேன் நான்.

"காலா வாடா, உன்னை காலால் எட்டி உதைக்கிறேன்" என்றாராம் மகாகவி அன்று.. அப்படித்தான் ஆகிவிட்டிருக்கிறேன் நானும். "வா.. வா.. திருவாளர் தலை வலியாரே... உனக்காச்சு, எனக்காச்சு... பார்த்துடறேன் ஒரு கை" என்கிறேன் வேதனையுடன்...

***